விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

புக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 10 வெள்ளிக்கிழமை (24.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 187




# பொதுக்கட்டமைப்பு இன்று பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

## இன்றே அரச தரப்பு கைச்சாத்திடும்?

(நமது நிருபர்)

**சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அங்கு அது நிறைவேற்றப்பட்ட பின்னர் உடனடியாக ஜனாதிபதியால் கைச்சாத்திடப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.**

**அதன் பின்னர் நோர்வேத் தரப்பின் ஊடாக விடுதலைப் புலிகளிடம் அது கை ஒப்பமிடுவதற்காக அனுப்பிவைக்கப்படும் எனவும் கூறப்பட்டது.**

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விளக்கங்களை அளிப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று மகாநாயக்க தேரர்களை கண்டியில் சந்தித்தார்.

இதன்போது பொதுக்கட்டமைப்புக் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

தேரர்களுடனான சந்திப்புக் குறித்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த நிதியமைச்சர் சரத் அமுனுகம, பொதுக்கட்டமைப்பு நகல் இன்று பர்ராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றார்.

பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக எழுந்த எதிர்ப்புக்களை அடுத்து மகாநாயக்கர்களுக்கு விளக்கமளித்ததன் பின்னரே பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படும் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

அதன் பிரகாரமே ஜனாதிபதி நேற்று மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஜனாதிபதியின் நேற்றைய கண்டி விஜயத்தின்போது (12 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் 27 ஆம் திகதி தீவகத்தில் மாபெரும் பேரணி

(யாழ்ப்பாணம்)

தமிழர் வாழ்விடங்களிலிருந்து இராணுவத்தினரை வெளியேறக்கோரியும், பௌத்த சிங்கள பேரிவாதவெறியைக் கண்டித்தும் எதிர்வரும் திங்கட்கிழமை தீவகத்தில் மாபெரும் கண்டனப்பேரணி நடைபெறவுள்ளது.

தீவகம் வடக்கு பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் ஊர்காவற்துறை நகரில் இப் பேரணி நடைபெறவுள்ளது.

இப்பேரணிக்கு தீவக மக்கள் அபிவிருத்தி நலன்காப்பகம், தீவக மகளிர் அணி என்பன ஆதரவு தெரிவித்துள்ளன.

ஊர்காவற்துறை பாலையடிச்சந்தியிலிருந்து பேரணி ஆரம்பமாகி நகரை வந்தடைந்து, அதன் ஊடாக ஊர்காவற்துறை (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்து?

### கொழும்பு ஊடகங்கள் பரபரப்புத் தகவல்

-(கொழும்பு)

அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே உருவாக்கப்படவிருந்த பொதுக்கட்டமைப்பு நேற்று கைச்சாத்திடப்பட்டதாக ஊடகங்களில் பரபரப்பாகச் செய்திகள் வெளியிடப்பட்டன.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அதிகாரி ஒருவர் அதில் கையொப்பம் இட்டதாகவும், பின்னர் நோர்வே அதிகாரிகள் இருவர் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனிடம் கையொப்பம் பெற்றதாகவும் அச்செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அரசு தரப்போ அல்லது விடுதலைப் புலிகளோ உத்தியோகபூர்வமான செய்திகள் எதனையும் வெளியிடவில்லை. இதே வேளை பொதுக் கட்டமைப்பில் கையொப்பம் இடப்பட்ட பின்னரே பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா முன்னர் கூறியிருந்தமையும், இன்று பொதுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ.சு.கட்சியின் அமைச்சர்கள் சிலருடன் இணைந்து ஜே.வி.பி கூட்டு அரசு அமைக்கும்

### புத்தளத்தில் சோமவன்ஸ அமரசிங்க

(நமது புத்தளம் நிருபர்)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய சில சிரேஷ்ட அமைச்சர்களும், ஜே.வி.பியும் ஒன்றிணைந்து புதிய கூட்டு அரசொன்றை உருவாக்கவுள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

நேற்று சிலாபம் சுதர்சன மண்டபத்தில் புத்தளம் மாவட்ட பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், பொதுக்கட்டமைப்பிற்கு புதிய பெயர் வடிவம் கொடுத்து, சுனாமி நிவாரணசபை என அரசு அமைக்கின்றது. இச்சபையானது விடுதலைப்புலிகளுக்கு நாட்டைப் பிரித்துக்கொடுக்கும் சபையாகவே நாங்கள் கருதுகின்றோம்.

இந்த உடன்படிக்கையானது வெறுமனே சுனாமி நிவாரண சபைக்கான உடன்படிக்கையல்ல. விடுதலைப் புலிகளுடனான மற்றொரு புரிந்துணர்வு உடன்படிக்கையென சோமவன்ஸ தெரிவித்தார்.

இலங்கையை வெளிநாட்டவர்களிடம் விற்கும் படலத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மேற்கொண்டுள்ளது.

நாட்டின் ஜனாதிபதியாக இவ் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களுக்கு தனித்தரப்புக் கோரி மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

### காத்தான்குடி பிரதேச செயலரிடம் மகஜர் கையளிப்பு

(மட்டக்களப்பு)

ஆழிப்பேரலை நிவாரணக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்று முற்பகல் காத்தான்குடி பிரதேச பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுவிளையாட்டு அரங்கில் ஒன்றுகூடிய மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் அங்கிருந்து பிரதான வீதிவழியாக தெற்கு எல்லைவரை பேரணியாக நகர்ந்து பிரதேசசெயலகத்தை சென்றடைந்தனர்.

பின்னர் அங்கு தமது கோரிக்கை அடங்கிய மனுக்களை பிரதேசசெயலாளர் ஏ.சி. ஏம்.மலீலிடம் கையளித்தனர். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் நோர்வே அனுசரணையாளர்கள், வெளிநாட்டு தூதரகங்களுக்குரிய மனுக்களும் பிரதேசசெயலகத்தில் கையளிக்கப்பட்டன.

சர்வதேச சமூகம், விடுதலைப்புலிகள் இயக்கம், அரசு ஆகியவை முஸ்லிம்அரசியல் தலைமையுடன் பேசவேண்டும். முஸ்லிம் தனியான தேசிய இனம் என்கிற அடிப்படையில் சமத்துவ தனித்தரப்புவேண்டும். தனித்தரப்பு கிடைக்காவிட்டால் சிறு (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அதிகாரிகள் குழு கிளிநொச்சிக்கு திடீர் விஜயம்

### கட்டமைப்பின் இறுதிவடிவம் குறித்து விளக்கம்

சுனாமியால் பாதிக்கபட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதற்கென அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பின் இறுதி வடிவம் தொடர்பாக நோர்வே அதிகாரிகளால் விடுதலைப் புலிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் தம் நெற்கொம், மற்றும் அவரது உதவியாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் நேற்று கிளிநொச்சிக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டு விளக்கமளித்துள்ளனர். நேற்றுக்காலை 10.30 மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் அவர்கள் கிளிநொச்சி வந்தடைந்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## நீரில் மூழ்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைக் கடலில் நீந்தச் சென்ற உயர்தர வகுப்பு மாணவன் நீரில் மூழ்கி மரணமாகினார். இச்சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த. (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

## தமிழகப் பேச்சு வழக்கில் 'பண்ணுங்க' பெற்ற பெருவாழ்வு

என்.விஜயன்

22 தினமணி அலுவலகத்தில் நீதிமன்றச் செய்தியை எழுதி ஆசிரியரிடம் கொடுத்த பின்னர், செய்தியாளர்களுக்குப் பொறுப்பாக இருக்கின்ற திரு.ரங்கராஜனை சந்திப்பதற்காகச் சென்றேன்.

அவர் தனது அறையில் பஸியாக இருந்தார். அதனால் சில நிமிடங்கள் அவரின் அறைக்கு வெளியே நின்றேன். அச்சமயத்தில் ரங்கராஜனின் அறைக்குள் இருந்து வெளியே வந்தவர் என் காத்திருப்பை அறிவதற்காக கதை கொடுத்தார்.

நீங்கள்...? அவரின் கேள்வியின் தொடக்கத்திலேயே, நான் சிலோனில் இருந்து வந்திருக்கிறேன்... கூறிமுடிப்பதற்குள் 'அட.. நீங்களா சிலோனில் இருந்து வந்தவங்க. இங்கபேசிக்கிட்டாங்க. சிலோனில இருந்து ஒருவர் இன்ரேன்சிப் செய்ய வந்திருக்கிறாங்க என்று'.

பதிலுக்கு அவரைப்பற்றி நான் வினாவ முற்பட்டபோதும், அவர் தொடர்ந்து பேசினார். நானும் மூன்று நாலுதடைவைகள் சிலோனுக்கு வந்திருக்கிறேன். அழகான இடம் என்ன செய்வது?... அவரின் கழிவிரக்கம் அமைதியை ஏற்படுத்த அதைக்கலைக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது.

சிலோனில எந்த இடத்திற்கு வந்திருக்கிறீங்க. என்கேள்வியை முன்கூட்டியேஎதிர்பார்த்தவர்போல் வன்னிக்கு வந்திருக்கிறேன். சாவகச்சேரிப் பகுதி எல்லாம் பார்த்திருக்கிறேன்.

1995 ஆம் ஆண்டு இராணுவம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய பின்னர் சாவகச்சேரிக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் சர்வதேச பத்திரிகையாளர் மாநாடு, இப்படியான சந்தர்ப்பங்களில் சிலோனுக்கு வந்திருக்கிறேன் என்றார். எனது கேள்விக்கான விரிவான விடைஅவர் சிறந்த செய்தியாளர் என்பதை உறுதி செய்வதாக இருந்தது.

அத்தோடு அவர் நின்று விடவில்லை. யாழ்ப்பாணத்தில் தனக்கு தெரிந்த சிலரைப்பற்றி விசாரித்தார். பேராசிரியர் சண்முகதாஸ், செங்கைஆழியான் (திரு.க.குணராசா) உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் திரு.சரவணபவன், யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர்திரு.பஞ்சலிங்கம் ஆகியோரை அவர் விசாரித்துக்கொண்டார்.

யாழ்ப்பாணத்திற்கு வந்த சென்ற ஒருவருடன் கதைத்துக் கொள்வது எனக்கு மிகுந்த திருப்தியை தந்தது. திரு. ரங்கராஜனின் அலுவலகத்திற்கு முன்பாக சில நிமிடங்கள் என்னுடன் கதைத்த அவர் விடைபெறுவதற்கு ஆயத்தமான போது உங்களுடைய பெயர்... பக்குவமாக கேட்டேன். கிருஷ்ணன் என்று கூறி, மீண்டும் சந்திப்பதாக விடைபெற்றார். சில நிமிடங்கள் உரையாடியபோதிலும் இறுதியிலேயே அவரது பெயரைக்கேட்டுக் கொண்டது குறித்து நீங்கள் ஏதேனும் நினைப்பீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அப்படி ஏதும் நினைக்காவிட்டால் அது நம் தமிழினத்தின் அடிப்படைக்கோட்பாட்டை மீறுவதாகவல்லவா அமையும்.

எனினும் உரையாடலின் இறுதியில் பெயர் கேட்டதிற்கும் காரணம் இருக்கவே செய்கிறது.

ஆங்கிலேயருக்கும் தமிழருக்கும் இடையே இருக்கக்கூடிய பண்பாட்டுக் கோலங்களில் ஒன்று, ஆங்கிலேயர் உரையாடுவதற்கு முன்னதாக, பெயரைக் கூறிக்கொள்வார்கள்.

ஆனால், நாங்கள் அப்படியல்ல. உரையாடிய பின்னரே பெயரை அறிந்து கொள்வோம். கால காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் அந்தப் பண்பாட்டை நான் மட்டும் விட்டுக் கொடுக்க முடியுமா என்ன?

அது மட்டுமல்ல, இறுதியில் பெயரை வினவிக்கொள்ளும் முறை தமிழகத்திலும் உண்டு. இதில் யாருடைய பண்பாடு உயர்ந்தது என்ற விவாத அரங்குகள் தேவையற்றதாகவே இருக்கும்.

ஏனெனில், இதுவோர் பண்பாட்டியல்சார் விடயம். எடுத்தவுடன் ஒருவரின்பெயரைக் கேட்பது அவ்வளவு நல்லது அல்ல என்ற நினைப்பு தமிழரிடம் உண்டு.

உரையாடல் உசிதமாக அமைந்தால் மட்டுமே பெயரைக் கேட்கும் முறையை, தமிழர்கள் தமது உயர்ந்த பண்பாடாக நினைக்கின்றனர். ஆனால் ஆங்கிலேயப் பண்பாட்டில் யு.ஆர்.மிஸ்டர் ... என்பதே அவர்களின் தொடக்க உரையாக அமையும்.

எனவே இந்த இருமொழிப்பண்பாட்டில் எமது தமிழ்ப்பண்பாட்டு முறையையே திரு. கிருஷ்ணனுடன் பகிர்ந்து கொண்டேன் என்பதை இந்த இடத்தில் தெரிவித்தாக வேண்டும்.

செய்தியாளர் திரு.கிருஷ்ணன் விடைபெற்றுச் சென்றதும் திரு ரங்கராஜனின் அறைக்குச் சென்றேன். அவரிடம் இயல்பாக இருக்கக்கூடிய பிஸியை குறைப்பதற்காக சென்னை உயர்நீதிமன்றத்திற்குப் போனேன். செய்திஎழுதி ஆசிரியரிடம் கொடுத்துள்ளேன்... மூலமந்திரம் போல் உச்சரித்தேன். அப்படியா?ஒரு முறைதானே நீதிமன்றிற்கு போயிருக்கிறீங்க. நாளைக்கும் அங்குதான் விசிற் பண்ணுங்க என்றார். தமிழகத்தில் 'பண்ணுங்க' என்ற சொற்பதத்திற்கு இருக்கக்கூடிய மதிப்பு மிகப்பெரியது. அவர்களின் மொழிவழி உரையாடலில் பண்ணுங்க என்ற சொற்பதமே அதிகமாகப்பயன்படுத்தப்படும் என்பது என்னுடைய கணிப்பு.

எழுத்து வழக்கில் இச்சொற்பதம் பயன்படுவதில்லையாயினும், பேச்சு வழக்கில் அதன் பயன்பாடு அங்கு தாராளம் என்பதை தமிழகப்பயணத்தின் மூலம் நான் கண்டு கொண்டேன். 'கள்பெற்றபெருவாழ்வு' எழுதிய டாக்டர். மு.வரதராசனார் 'பண்ணுங்க' பெற்ற பெருவாழ்வு பற்றியும் எழுதியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே என நான் நினைத்தது உண்டு.

யாழ்ப்பாணப் பேச்சு நடையிலும் பண்ணுதல் என்ற சொற்பதம் இருந்தாலும் அதனை அழகுச் சொல்லாக யாருமே கருதுவதில்லை. சிலவேளை அது கோப மொழியாகவும் அமைவதால் அதற்கான மதிப்புடமை குறைவாகவே உள்ளது. இச்சிந்தனைகள் என்னை ஆட்படுத்திக்கொள்ள, தினமணி அலுவலகத்தில் இருந்து வெளியேறினேன். (திங்கள் வளரும்)

## 4 மேல் நீதிமன்றங்கள் புதிதாக அமைக்கப்படும்

(கொழும்பு)

நாட்டில் புதிதாக 4 மேல் நீதிமன்றங்களை அமைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிப்பதற்கு தற்போது இயங்கி வரும் மேல் நீதிமன்றங்களுக்கு மேலதிகமாக இந்தப் புதிய மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குகள் குறித்து ஆராய்வதற்கு நீதியமைச்சினால் நியமிக்கப்பட்ட விசேட குழு இதற்கான சிபார்சைச் செய்துள்ளது.

குறிப்பிடப்பட்ட 4 புதிய மேல் நீதிமன்றங்களும் 3 மாகாணங்களில் அமைக்கப்பட வேண்டும் என்று அந்த சிபார்சு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, மத்திய மாகாணத்தில் நுவரெலியா, தம்புள்ளை ஆகிய இடங்களிலும், சம்பிரகமுவ மாகாணத்தில் எம்பிலிப்பிட்டிய விலும், வடமத்திய மாகாணத்தில் பொலனறுவையை அண்மித்த பகுதியிலும், உத்தேச மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

வழக்கு விசாரணைகளின் போது சந்தேகநபர்கள் வாக்கு மூலங்கள் மற்றும் சாட்சியங்கள் அளிக்கும் போது அவற்றை ஒளிப்பதிவு செய்து அவற்றை வழக்கு விசாரணைகளுக்குச் சமர்ப்பிப்பதற்கான சிபார்சும் விசேட குழுவின் அறிக்கையில் உள்ளடக்கபபடும். (ந-2)

## குறுகிய அரசியல் நோக்கங்களை தவிர்க்குமாறு பிரதமர் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக குறுகிய அரசியல் நோக்கங்களை மறந்து அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும எனப பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

கடுகண்ணாவை, கோட்டப் பொகடே விகாரையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறுகிய அரசியல் பேதங்களை மறந்து தமது நலன்களை மட்டுமே நினைக்கும் நிலையைத் தவிர்த்து தலைவர்கள் செயற்பட வேண்டும் எனறும் அவர் கூறினார். தமிழ், சிங்கள, முஸ்லிம அனைவரும் ஒன்றாக வாழக்கூடிய சமூகததை நாட்டில் ஏற்படுத்த வேண்டும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (து-2)

## வெளிநாட்டு நாணயத்தாள் கடத்தல் கட்டுநாயக்காவில் இந்தியர் இருவர் கைது

(கொழும்பு)

சுமார் 6 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களை இலங்கையிலிருந்து கொண்டு செல்ல முயற்சித்த இந்தியர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிங்கப்பூருக்குச் செல்வதற்காக இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த போது சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் தமது உடலுக்குள் மறைத்து வெளிநாட்டு நாணயத் தாள்களைக் கொண்டுசெல்ல முயற்சித்துள்ளனர். அவர்களது சந்தேகத்திற்கு இடமான நடவடிக்கையின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இந்த வெளிநாட்டு நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த வெளிநாட்டு நாணயத்தாள்களுள் யூரோ, சிங்கப்பூர் டொலர், சுவிஸ் பிராங், அவுஸ்திரேலிய டொலர் மற்றும் சுற்றுலாக் காசோலை என்பனவும் காணப்பட்டதாக கட்டுநாயக்க சுங்கத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-2)

## மந்திகை வைத்தியசாலையில் 29இல் கண்சிகிச்சைப் பிரிவு ஆரம்பம்

(மருதங்கேணி)

மந்திகை வைத்தியசாலையில் கண்சிகிச்சைப் பிரிவை விரைவில் இயங்குவதற்கு மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதி புதன்கிழமைகளில் கண் சிகிச்சைப் பிரிவு இயங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன் முதலாவது கண்சிகிச்சைப் பிரிவு எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. இது தொடர்ந்து பிரதி புதன்கிழமைகளில் நடைபெறும் எனவும் டாக்டர் குகதாசன் அவர்கள் யாழ் போதனா வைத்தியசாலையிலிருந்து வந்து இவ் கண் சிகிச்சைப் பிரிவை நடாத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-35)

## விளையாட்டு விழா

(கற்கோவளம்)

தமிழ் வேதபாராயண சனசமூக நிலையம் கோண்டாவில் மேற்கு முன்பள்ளியின் 4 ஆவது விளையாட்டு விழா கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு தா.தியாகமூர்த்தி தலைமையில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கலந்துகொண்டார். (ந-104)

# இணைப்பாட்சியில் இனிய வாழ்வுவாழ

# ஜனாதிபதி வழி வகுப்பாரா?

இதுகாலவரை பௌத்த சிங்கள வல்லாண்மையே நாட்டின் பேரழிவுக்கு காரணமாக இருந்தபோதும், தமிழினம் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டபோதும் தமிழன் மீதும் குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும் பழி சுமத்தி வந்த குடியரசுத் தலைவி சந்திரிகா, சடுதியாக ஞானம் பெற்ற நிலையில் "அரசாங்கத்தின் மீதான புலிகளின் குற்றச்சாட்டு நியாயமானது" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளதுடன் "தமிழர் தனிநாடு கேட்கின்ற அளவிற்கு தொடர்ச்சியாக பல இன்னல்கள் அவர்கள் அனுபவித்து வந்துள்ளனர் என்பதை நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும் என்றும் சிங்களத் தலைமைப்பீடம் தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தவில்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்றும் கூறியுள்ளது ஆச்சரியத்தை அளிக்கிறது.

இவர் அரசியலில் பெரும் மனமாற்றத்தைக் கண்டுகொண்டார் என்பதற்காக அவரை மன்னிததாலும் அவரது பழைய அரசியல் வரலாற்றை எளிதில் மறக்கமுடியாது.

ஆளும் இனமாக சிங்கள இனமும் ஆளப்படுகின்ற இனமாக தமிழினமும் இருக்கின்ற வரையில் தமிழினம் அழிக்கப்படுவதை எவரும் தடுக்கமுடியாது. 'திருகோணமலையிலும் பொத்துவில் அறுகம்குடாவிலும், புத்தர் சிலையை நிறுவிய பௌத்த குருமாரின் செயல் தமிழ் மக்களை ஆவேசப்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட ஒன்று' எனக் குடியரசுத் தலைவி கண்டித்துள்ளார். இவ்விதம் மனந்திறந்து கண்டித்த சந்திரிகா மேலும் ஒருபடி மேலே சென்று "தமிழ் மக்களுக்கு அரசு எந்தவிதமான உதவிகளையும் வழங்குவதில்லை என்ற விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டுக்கள் நியாயமானது" என்று கூறியது உள்ளம் தொடும் சொற்களாகக் கொள்ளப்படுகின்றது.

இவ்விதம் கூறியுள்ள சந்திரிகா எம்மை மேலும் வியப்பில் ஆழ்த்துகின்ற முறையில் "விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தக்கூடாது எனக் கூறும் ஜே.வி.பியினர் கிழக்கில் வாழும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் பட்டினியால் சாக வேண்டும் என விரும்புகின்றனரா" என விடுத்துள்ள வினா பொருள் பொதிந்த வினாவாகும்.

தன் அருமைத் தந்தையைக் கொன்றவர்கள் புத்த குருமார்கள். தம் அன்புக் கணவனைக் கொன்றவர்கள் ஜே.வி.பியினர். இவர்களை எவ்வதமும் திருத்தி ஆட்கொள்ளலாம் என நம்பி ஏமாந்த சந்திரிகா, இவர்களின் வெறியாட்டத்தைச் சாடி "பொதுக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவேன்" எனக் கூறும் கூற்றை நாம் முற்றாக புறக்கணிக்க முடியாது. இனிமேல் எவ்வித காலந்தாழ்த்தலுக்கும் உடன்படாது உடனடியாக இப்பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதராயின் நாம் அதை வரவேற்கின்றோம். இதன் உள்ளடக்கம் ஈழத் தமிழ் மக்களின் முழு ஆதரவைப் பெற்றுளள, தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக விளங்கும விடுதலைப்புலிகளின் ஒப்புதலைப் பெற்றதாகவே அமையவேண்டும். குடியரசுத் தலைவி பொதுக்கட்டமைப்பை நிறைவேற்றுவாராயின இதனை நிறைவேற்றுவதற்காக மட்டும் நாம் எதிர்க்கட்சியிலிருந்து நிபந்தனையுடன் அரசுக்கு ஆதரவை வழங்கலாம்.

இந்தப் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதில் அவர் காட்டுகின்ற நிலைத்த ஈடுபாட்டை பொறுத்துத்தான் இடைககால அரசைப் பற்றியும் காலப்போக்கில் பொருள் பொதிந்த இணைப்பாட்சியையும் இவா தருவாரென்று எண்ண இடம் உண்டு. எம்முடைய எதிர்பார்ப்புக்கள் எவ்வளவு தூரம் ஏற்புடையது என்பதற்கு காலம்தான் பதில் கூற வேண்டும்.

சிங்களவரை நாம் என்றும் எதிரிகளாக கொள்ள விரும்பவில்லை. மாறாக உற்ற நண்பர்களாக - உடன்பிறப்புக்களாக கொள்ள விரும்புகின்றோம். ஆனால் எல்லைமீறிய அதிகாரங்களை அவர்கள் அனுபவிக்க இன்றைய ஒறறையாட்சி இடம்கொடுக்கின்றது. எனவேதான ஒற்றையாட்சி ஒழிக்கப்பட்டு இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காணமோம எனக் கூறுகின்றோம். ஆனால் இணைப்பாட்சியில் இணைந்து இனிய வாழ்வு வாழ சிங்களவர் மறுப்பாராயின் தமிழினத்தைத் தோற்றுவிப்பதை விட எமக்கு வேறு வழியில்லை. சிங்கள வெறியாட்டத்தை உற்றுக் கவனித்துள்ள உலக நாடுகள் ஈழத்தமிழரின் இன்றைய நிலையை உணர்ந்து தமிழர் தம் தன் உரிமையை நிலைநாட்ட - சுய நிர்ணயக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்த உறுதுணையாக நிற்க வேண்டும் என்பதுதான் எமது விடுதல் அறியா விருப்பம்.



**மா.க.ஈழவேந்தன்**

## பொதுக்கட்டமைப்புக்கு

# மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்துமாறு வாசுதேவ கோரிக்கை

(கொழும்பு)

சுனாமிப் பொதுக்கட்டமைப்பை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான காலம் கனிந்துள்ளதாகவும் இதற்கமைய பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தி அதன் பலன்களை மக்கள் அனுபவிக்கக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமென்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்தி அதுகுறித்து மக்களின் விருப்பத்தைப் பெறுவது அவசியமென்று தெரிவித்த அவர்,

பொதுக்கடடமைப்பு யோசனையை நடைமுறைப்படுத்தி அதன் பிரதிபலன்கள் மக்களுக்குக் கிட்டுமாயின் பொதுக்கட்டமைப்புக்கு பெரும்பான்மை மக்களின் ஒத்துழைப்பு கிடைக்குமென்று அவர் மேலும் தெரிவித்தார். (து-08)

## நற்கருணை நற்செய்தி

(கொழும்புத்துறை)

விஷேட நற்கருணை நற்செய்திப் பெருவிழா எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் மாலை 5 மணிமுதல் 12 மணிவரை புனித அடைக்கல அன்னை ஆலய (O.L.R) மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நற்செய்தி அளிப்பவர் வல்லமை கதங்களின் மைந்தன் அருட்பணி போல் ரொபிஷ்சன. நற்கருணை நற்செய்திப் பெருவிழாவில் கலந்துகொள்வோருக்கு போக்குவரத்து வசதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகவும் மேற்படி பங்குத் தந்தை தெரிவித்துள்ளார்.

(அ-51)

## கற்கை நெறி

(சில்லாலை)

மனித உரிமைகள் இல்லத்தால் நடாத்தப்பட்டுவரும் இலவச மனித உரிமைகள் கற்கை நெறியின் ஆறுமாதத் தொடரின் மூன்றாவது இரண்டுநாள் கற்கைநெறி நாளையும் நளை மறுதினமும் யாழ்ப்பாணம் 109 கண்டி வீதியில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-58)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும்,

"தொண்டர்தம் பெருமை சொல்லவும் பொதே" எனும் பொருள் பற்றி ஆசிரியர் செஞ்சொற் செல்வன் இரா.செல்வவடிவேல் ஆன்மீகச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(ற-35)

# ஊழியர் சேமலாப நிதியை அறவிட 600 அறவீட்டு அலுவலர் நியமனம்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரிய பங்களிப்பு நிதியை செலுத்தாத தொழில் வழங்குனர்களிடம் இருந்து அவற்றை அறவிடுவதற்காக புதிதாக 600 அறவீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளதாக தொழில் அமைச்சர் அதாவுட செனெவிரத்ன தெரிவித்துள்ளார்.

வேலையற்ற பட்டாதரிகளுக்கு அரச துறைகளில் நிரந்தர நியமனங்களை வழங்கும திட்டத்தின் கீழ் 600 பட்டதாரிகள் இந்தப பதவிக்கு நியமனம் செய்யப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பல பிரதேசங்களிலும் சிறியளவிலான நடுத்தர மற்றும் பாரிய அளவிலான தொழில் முயற்சிகளை மேற்கொண்டுவரும் 2 இலட்சத்திற்கும் அதிகமான தொழில் வழங்குனர்கள் உள்ளபோதிலும் அவர்களில் 50 ஆயிரத்திற்கும் குறைவானோர் மாத்திரமே தொழில் சேமலாப நிதியத்திற்கு தமது பங்களிப்பு நிதியைச் செலுத்தி வருவதாக நிதியமைச்சு மேற்கொண்ட மதிப்பீடுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறான தொழில் வழங்குனர்களிடம் இருந்து உரிய நிதியை அறவிட தொழிலமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்னும் 6 மாதத்திற்குள் இது தொடர்பான முறையான திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளத்து.

இந்தத் திட்டத்தின் கீழ் நாட்டின் சகல பிரதேசங்களிலும் 600 அறவீட்டு உத்தியோகததர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (அ-9)

## உதைபந்தாட்டப் போட்டியில்

# 3 ஆவது ஆட்டத்தில் யாழ்.அணி வெற்றி

(சுண்டுக்குழி)

அகல இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனததினால் வருடாந்தம் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்டு வரும் 17 வயதுக்கு உட்பட்டோர் உதைபந்தாட்டப் போட்டிகள் இம்முறை கடந்த 17,18,19,ஆம் திகதிகளில் பதுளையில் நடைபெற்றன.

இம்முறை போட்டிகளில் 16 மாவட்ட அணிகள் கலந்துகொண்டன. இவ் அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்ட போது 'ஏ' பிரிவல் கொழும்பு I, நுவரெலியா, யாழ்ப்பாணம், கண்டி ஆகியவற்றின் அணிகளும், 'பி' பிரிவில் கொழும்பு II, திருகோணமலை, அனுராதபுரம், பதுளை ஆகிய அணிகளும், 'சி' பிரிவில் குருநாகல், மன்னார், நீர்கொழும்பு, காலி, ஆகியவற்றின் அணிகளும் 'டி' பிரிவில் களுத்துறை, கம்பொல, பொலநறுவை, இரத்தினபுரி ஆகியவற்றின் அணிகளும் இடம் பெற்றன.

இதில் பங்குபற்றிய யாழ்.அணி அதன் முதலாவது ஆட்டத்தில் கண்டி அணியிடம் 1:0 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் யாழ்.அணி கொழும்பு I அணியிடம் 3:1 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.அணி நுவரெலியா அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது. (ற)

# பொசன் நிகழ்வு

பொசன் பௌர்ணமி தினத்தை யாழ்.பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகமும் 51 ஆவது சேனையகமும் இணைந்து விஷேடமாகக் கொண்டாடின.

இத்தினத்தில் பொசன் பக்தி கீதங்கள் இசைக்கப்பட்டு 84 ஆயிரம் தீபங்கள் யாழ்.ஸ்ரீ நாகவிகாரையில் ஏற்றப்பட்டு, தீப ஆராதனைகள் நடாத்தப்பட்டதுடன், யாழ்.சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் அலங்காரக கூடுகள் கண்காட்சியும் நடாத்தப்பட்டதாக யாழ்.பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம்முறை கொண்டாடப்பட்ட பொசன் பௌர்ணமி நிகழ்வில் சுமார் 25 ஆயிரம் மக்கள் வரை கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில், தென் பகுதியில் இருந்து வருகை தந்திருந்த மக்களும் வடபகுதி மக்களும் ஒன்றிணைந்து கலந்துகொண்டு தீபங்களை ஏற்றி சமய அனுஷ்டானங்களில் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ நாகவிகாரையில் ஏற்றப்பட்ட 84 ஆயிரம் தீபங்களையும் ஒரே சமயத்தில் இராணுவத்தினரும் தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த மக்களும், வடபகுதி மக்களும் ஏற்றி மலர் ஆராதனைகளிலும் கலந்துகொண்டு, பொசன தினத்தை முன்னிட்டு இசைக்கப்பட்ட பக்தி கீதங்களைக் கேட்டு மகிழ்ந்ததுடன் மின் அலங்காரக கூடுகளையும் கண்டுகளித்தனர்.

மற்றும் யாழ்ப்பாணத்தில் இதுபோன்ற ஒரு புனித நிகழ்வை நடத்தியமை குறித்தும் பொதுமக்கள் பாதுகாப்பு படையினருக்கு பாராட்டு தெரிவித்தனர் எனவும் அச் செய்திக குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற)

# மீனுக்கு விரித்த வலையில் அகப்படும் பொருட்கள்!

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதிகளில் மீண்டும் கரைவலை தொழில் ஆரம்பிக்கப்பட்டு தொழில் செய்துவரும் நேரத்தில் கரைவலை மடியில் சுனாமி அனர்த்தத்தினால் அள்ளுண்டு கடலுக்குள் சென்ற பொருட்களே மீனிலும் பார்க்க தொகையாக அகப்படுவதாகத் தெரியவருகிறது.

இந்தக் கரைவலை மடியில் சூட்கேஸ்" கள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள மற்றும் உடுப்புப் பெட்டிகள் சமையல் பாத்திரங்கள் என்பனவே அகப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் கோவில் பகுதியில் கரை வலை வளைத்துக்கொண்டிருந்த போது உடுப்புப் பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பெட்டிக்குள் உடுப்புகளும் 32 பவுண் தங்க நகைகளும் காணப்பட்டதாகவும் பின்னர் இது உரியவரிடம் கையளிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

(ற-35)

# அருள் ஒளி வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் 'அருள் ஒளி' ஆனி மாத இதழ் முகப்பில் நடராஜரின் நடனக்காட்சியையும் பின் அட்டையில் நயினை நாகபு,சணி அம்மனின் அருட்காட்சியையும் தாங்கி பொன் விழாக் காணும் அகில இலங்கை இந்து மன்றத்தை வாழ்த்துவதோடு தொடங்கிப் பல அரிய கட்டுரைகளையும் கவிதைகளையும உள்ளடக்கி மறைந்த பேராசிரியர் நந்தி ஐயாவுக்கு அஞ்சலி செலுத்துவதாக வெளிவந்துள்ளது. (அ-2)

## இன்று ஒரு தகவல்

# அறிவு பலம்

இந்தக் காலத்துச் சிறுபிள்ளைகளை சமாளிப்பது மிகவும் கஷ்டம். ஒருநாள் பத்துப் பதினைந்து பாடசாலைப் பிள்ளைகள் இங்கு வந்திருந்தார்கள். வழியில் நான் மாட்டிக்கொண்டேன். ஒரு சிறுவன் நிமிர்ந்து பார்த்தான். "சார்! இன்று ஒரு தகவலை என்போன்ற பிள்ளைகள் எல்லோரும் கேட்கிறோம் அதனால் எங்களுக்குப் பிடிக்கக் கூடியது போன்ற கதைகள் ஏதாவது சொல்லுங்கள் என்று கூறினான் அப்படித்தானே சொல்கிறேன்" என்றேன். "சொல்கிறீர்கள் தான்! இருந்தாலும் பல சமயம் அது எங்கள் பள்ளிக்கூடத்தையே ஞாபகப்படுத்துகிறது" என்றான். "அது எப்படி" என்றேன். "வகுப்பில் எங்கள் வாத்தியார் பாடம் நடத்துவதற்கும் நீங்கள் தகவல் சொல்வதற்கும் பல சமயங்களில் அதிக வித்தியாசம் தெரிவதில்லை" என்றான்.

இதிலிருந்து அவன் என்னை கௌரவப்படுத்துகிறானா? காலை வாருகிறானா? என்று சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும் ஒரு வழியாகச் சமாளித்து அவர்களை அனுப்பி வைத்தேன். இன்று இவர்களைப் போன்ற சிறுவர்களுக்கு ஒரு கதை சொல்கிறேன்.

ஒரு பள்ளிக்கூடத்தில் வகுப்பு முடிந்து மணி அடித்தது. பிள்ளைகள் சத்தம் போட்டுக்கொண்டு சந்தோஷமாக வெளியோ ஓடிவந்தார்கள். ஒரு பெரியவர் அந்த வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார். அவரது காலில் புதிதாக வாங்கிய செருப்பு பார்ப்பதற்கு ஜோராக இருந்தது. ஒரு குறும்புக்கார மாணவன் இதைக் கவனித்தான். இவனா எப்படியாவது ஏமாற்றி... அந்த செருப்பை எடுத்துக்கொண்டு ஓடிப்போய்விட வேண்டும் என்று நினைத்தான். மற்றைய சிறுவர்களுடன் சேர்ந்து ஒரு திட்டம் போட்டான். இன்னொரு பையன் அந்தப் பெரியவரை ஏமாற்று வதற்கு ஒரு யோசனை சொன்னான். அதாவது "அவரை ஒரு மரத்தில் ஏறச் சொல்வோம். அவர் செருப்பை கழற்றிப் போட்டு விட்டு மேலே ஏறுவார். உடனே நாம் அதை தூக்கிக் கொண்டு ஓடிப்போய் விடுவோம்" என்றான். "சரி என்று எல்லோரும் ஒத்துக் கொண்டனர். உடனே எல்லோரும் மிகவும் நல்ல பிள்ளை மாதிரி அந்தப் பெரியவரிடம் போனார்கள். ஐயா... எங்களால் இந்த மரத்தில் ஏறமுடியவில்லை.நீங்கள் பெரியவர் உங்களுக்கு அனுபவம் இருக்கும். நீங்கள் ஒருமுறை ஏறிக் காட்டினால் நாங்கள் கற்றுக்கொள்வோம்" என்றனர். பெரியவரும் ஒத்துக் கொண்டார். இருந்தாலும் அவர் மனதிற்குள் ஒரு சந்தேகம். "ஏன் [illegible] திடீரென்று இவர்கள் இப்படிக் கேட்கின்றனர் என்று ஒரு சிறுவன் காலில் உள்ள செருப்பை கவனிப்பதை யும் அவர் கவனித்துவிட்டார். 'சரி இருக்கட்டும்' என்று நினைத்துக் கொண்டார். "சரி ! பிள்ளைகளே! உங்களுக்கு மரம் ஏறித் தானே காட்டவேண்டும் இதோ பார்த்துக்கொள்ளுங்கள்" என்றார். பிள்ளைகளின் மனதிற்குள் படு குஷி. பெரியவர் ஏமாந்து விடப் போகிறார் என்று மிகவும் அக்கறையாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தப் பெரியவர் என்ன செய்தார் தெரியுமா? செருப்பைக் கழற்றி தன் இடுப்பில் செருகிக் கொண்டு மரத்தில் ஏற ஆரம்பித்தார். பிள்ளைகள் திகைத்து விட்டனர். திட்டம் நிறைவேறாது போல் இருக்கிறதே என்று. ஒரு சிறுவன் அவரைப் பார்த்து "ஐயா பெரியவரே மரத்தின் மீது ஏறும் போது எதற்கு செருப்பைக் கூடவே எடுத்துக் கொண்டு போகிறீர்கள்? அங்கே என்ன நடைபாதையா இருக்கிறது? அதனால் செருப் பைக் கீழே போட்டுவிட்டு போங்கள்" என்றான். அதற்கு அந்தப் பெரியவர் "நீ சொல்வது மாதிரி செருப்பைக் கீழே போட்டு விட்டு போக லாம். ஒரு வேளை மரத்தின் மீது நடைபாதை இருந்தால் என்ன செய்வது? அதற்குத்தான் முன் எச்சரிக்கையாக எடுத்துச் செல்கிறேன்" என்றார். அதனால் புத்தி சாலிகளை ஏமாற்று வது சிரமம். இதை சிறுவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். உடல்பலம் மட்டும் இருந்தால் போதாது. அறிவு பலம் வேண்டும். அதை வளர்த்துக் கொள்ள வேண் டும்

ஒரு குரங்கு ஒரு மரத்தின் மீது உட்கார்ந்திருந்ததாம். அந்த மரத்திற்கடியில் ஒரு சிங்கம் நின்று கொண்டிருந்தது. சிங்கத் திற்கு சரியான பசி. மிகவும் சாமர்த்தியமாக அந்தக் குரங்கைப் பார்த்து "ஏன் அங்கேயே உட்கார்ந்திருக்கிறாய்? கீழே இறங்கி வா விளையாடலாம்" என்றது குரங்கு. "நான் கீழே இறங்கி வந்தால் நீ என்னை தின்று விடுவாய் அதனால் உன் வாயை மூடிக் கட்டிக்கொள் உன் கால்களையும் சேர்த்துக் கட்டிக் கொள் அதன்பின் வேண்டுமானால் இறங்கி வருகிறேன்" என்றது.

சிங்கம் அதேபோல் செய்துவிட்டது. தன் வாயையும் காலையும் இறுக்கிக்கட்டியது அதன்பின் அந்தக்குரங்கு இறங்கி கீழே வந்து சிங்கத்திடம் போனது. அப்போது அதன் உடல் நடுங்கியது. "ஏன் நடுங்குகிறாய்?" என்று கேட்டது சிங்கம். "நான் நடுங்கவில்லை! உணர்ச்சி வசப்படுகிறேன்" என்றது குரங்கு. 'ஏன்?' என்று கேட்டது சிங்கம். "முதல் முறையாக நான் இன்று சிங்கத்தின் கறியைத் தின்று பார்க்கப்போகிறேன்! அதனால்த்தான் அப்படி" என்றது குரங்கு.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மீள்குடியமர்வை வலியுறுத்தி இடம்பெயர்ந்தோர் தொடர் போராட்டங்களை முன்னெடுக்க முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியமர்வை வலியுறுத்தி யாழ். மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்தோர் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர். இதுவிடயம் தொடர்பில் யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசமும், வலி வடக்கு பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியமும் இணைந்து இடம்பெயர்ந்தோர் தமது பிரதேசங்களுக்கு திரும்புவதற்கான கோரிக்கையை முன்வைத்து தொடர் போராட்டங்களை முன்னெடுப்பதென தீர்மானித்துள்ளன.

இடம்பெயர்ந்தோரது பிரதேசங்களில் இருந்து ஸ்ரீலங்கா படைகள் வெளியேற மறுத்துள்ளமையானது இயல்பு வாழ்க்கைக்கு திரும்புதல் என்ற போர் நிறுத்த உடன்படிக்கையின் சரத்தை மீறுவதாகவும் மனித உரிமைகளையும், இயற்கை நீதியையும் மீறுவதாகவும் அமைந்துள்ளமையால் இடம்பெயர்ந்த மக்களது பொறுமை எல்லை கடந்துவிட்ட நிலையிலேயே இத் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இம்மக்களது கடந்த காலப் போராட்டங்களுக்கு செவி மடுக்க ஸ்ரீலங்கா அரசாங்கமும், படைத்தரப்பும் மறுத்துள்ளமை இடம்பெயர்ந்த மக்களது வாழ்க்கையை, இருப்பைக் கேள்விக்குரியதாக்கிவிட்டது.

இத்தொடர் போராட்டங்களுக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்கள் அமைப்புக்களும் முழுமையாக ஒத்துழைப்பு நல்க முன் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# இலங்கையருக்கு வேலைவாய்ப்பு ஆப்கான் அரசாங்கம் முன்வருகை

(கொழும்பு)

இலங்கையர்களுக்கு ஆப்கானிஸ்தானில் வேலை வாய்ப்புகளை வழங்க அந்நாட்டு அரசாங்கம் முன்வந்திருப்பதாக தொழிலமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் தொழிலமைச்சர்,வெளிவிவகார அமைச்சர் ஆகியோரைத் தொழிலமைச்சர் அதாவுட செனவிரத்ன சந்தித்தபோதே இவ்விடயம் குறித்து பேச்சு நடாத்தி இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்கமைய மின்சாரம் ,சுகாதாரம், விவசாயம் மற்றும் உயர் கல்வி ஆகியன உட்பட மற்றும் பல துறைகளுக்குமான வேலைவாய்ப்புகள் கிடைக்கவுள்ளன.

இதேவேளை, நிலக்கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் சம்பந்தப்பட்ட துறையில் பயிற்சிகளைப் பெற்றவர்களை பெற்றுத் தருமாறு ஆப்கானிஸ்தான் அமைச்சர்கள் தொழிலமைச்சர் அதாவுட செனவிரத்னவிடம் கேட்டுள்ளனர்.

மேலும் இரு நாடுகளுக்குமிடையில் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இணைப்பு அதிகாரிகள் இருவரை நியமிப்பதற்கு இந்த சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டதாக தொழிலமைச்சு விடுத்துள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


(ரு-8)











காரைநகர் கிழவன்காடு கலாமன்றக் கலைவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் காரைநகர் பிரதே அரசியல்துறைப் பொறுப்பாள ந.கானகன், அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் இ.ஜெயராஜ், நல்லை ஆதீன குரு முதல்வர், யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம், தமிழருவி த.சிவகுமாரன், திரு.திருமதி.ஈ.எஸ்.பி. நாகரட்ணம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதனையும், காரைநகர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் சிறப்புரையாற்றுவதனையும், யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் செல்வி பரமேஸ்வரி கணேசனுக்கு அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் இ.ஜெயராஜ் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதனையும், கலாமன்ற மாணவர்களின் நாட்டிய நிகழ்வு, சிறப்புப் பட்டிமன்றக் காட்சிகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

# போர் நிறுத்த உடன்பாடு சாதித்தது என்ன?

• சிங்கள அரசிற்கும் – தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குமிடையே போர்நிறுத்த உடன்பாடு கையெழுத்தாகி மூன்று ஆண்டுகள் முடிவடைந்துள்ளன. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த மூன்று ஆண்டுகளும் பொறுமையுடனும் விரக்



தியுடனும் செலவாகியுள்ளன. ஒப்பந்தம் செய்வதில் சிங்கள அரசு காட்டிய சிரத்தையை அதை அமுல்படுத்துவதில் காட்டவில்லை.

160நாள் வேலைத் திட்டத்தை உடன்பாடு உள்ளடக்கியிருந்தது. போக்குவரத்துத்தடை நீக்கப்படுவது, பொருளாதாரத் தடைகள் அகற்றப்படுவது, இராணுவத் தலையீடு குறைக்கப்படுவது, அரசியல் தீர்வு எட்டப்படுவது என்று தீர்க்கமான வேலைத்திட்டங்களை அது உள்ளடக்கியிருந்தது.

போக்குவரத்துத்தடை நீக்கம், பொருளாதாரத் தடை நீக்கம் என் பன சிங்கள அரசின் நலனுடன் சம்பந்தப் பட்டுந் தது. எனவே அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அதற்குச் சிரமம் இருக்கவில்லை. மீன் பிடித்தலுக்கு இன்னமும் கட்டுப்பாடும் – தொல்லைகளும் இருக்கின்றன. ஆனால் மக்கள் குடியிருப்புகள், ஆலயங்கள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்களில் நிலைகொண்டுள்ள படையினரை விலக்கிக்கொள்வது, அரசியல் தீர்வு காண்பது போன்றவற்றில் அளித்த வாக்குறுதிகளை சிங்கள அரசு நிறைவேற்றவில்லை.

தற்போதைய போர் நிறுத்த உடன்பாடு உட்பட சிங்கள அரசுடனான எந்தவொரு உடன்பாடும் சர்வதேச கண்காணிப்பின் கீழ் நடைபெற வேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடாகும். பேச்சுவார்த்தை என்ற போர்வையில் சிங்கள அரசு நடாத்த முனையும் சதி அரசியலை சர்வதேச சமூகத்திற்கு அம்பலமாக்கவே புலிகள் இயக்கம் இத்தகையதொரு நிலைப்பாட்டிற்கு வரக் காரணமாகும். புலிகள் கணித்தது போலவே அரசியல் ரீதியாக சிங்கள அரசு இன்று அம்பலமாகி வருகின்றது.

சமாதான முயற்சிக்கு குறுக்கே நின்று இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு முட்டுக்கட்டை போடுவது புலிகள் இயக்கம்தான் என்று சிங்கள அரசு செய்துவந்த பிரசாரம் இன்று அடியோடு அற்றுப்போகும் நிலை உருவாகி வருகின்றது.

இனப்பிரச்சினை தொடர்பில் என்றுமில்லாத வகையில் சர்வதேச அழுத்தத்திற்கு சிங்கள அரசே உள்ளாகி வருகின்றது. இருந்தாலும் தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றி அவர்களின் ஜனநாயக உரிமைகளை வழங்குவதில் சிங்கள அரசு தொடர்ந்து மறுத்து வருகின்றது. போர் நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் சிங்கள அரசிற்கும் – புலிகள் இயக்கத்திற்கும் இடையில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஒவ்வொரு சுற்று அமர்வின் போதும் ஒவ்வொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆயினும் இது நாள் வரை எவையும் நடைமுறை வடிவம் பெறவில்லை.

படைத்தரப்பினரின் ஒத்துழையாமை, பேரினவாத சக்திகளின் எதிர்ப்பு என்று அவற்றிற்கு சிங்கள அரசு காரணங்கள் கூறியது. உண்மையில் தான் ஒப்புக்கொண்டபடி செயற்படச் சிங்கள அரசு மறுத்துவருகின்றது என்பதே மெய்யாகும். இந்த வகையில் ஆறு சுற்றுப் பேச்சுகளும் அர்த்த மற்றுப் போய்விட்டன. பேச்சு முறிவடையப் போகின்றது – அதற்கு சிங்கள அரசையே சர்வதேச சமூகம் குற்றம் சாட்டப்போகின்றது என்ற ஒரு கட்டத்தில் உபகுழுக்கள் என்றவொரு தீர்மானத்தை அரசு முன்மொழிந்து சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திருப்பியது.



மக்களை மீளக்குடியமர்த்த ஒரு துணைக்குழு, இராணுவத் தலையீட்டைக் குறைக்க ஒரு துணைக்குழு, பொருண்மிய அபிவிருத்திக்கு ஒரு துணைக்குழு, அரசியல்தீர்வு தேட ஒரு துணைக்குழு என்று வெற்று ஆவணங்களை சிங்கள அரசு வரைந்து தள்ளியது. எனினும் எந்த ஒரு துணைக்குழுவும் செயற்பாட்டுக் களத்திற்கு வரவேயில்லை. வடக்கு–கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக்கு 'சிரான்' என்றதொரு கட்டமைப்பை நிறுவிய அரசு கொழும்பில், ஒரு அலுவலகத்தையும் திறந்திருந்தது. அதுவும் செயற்படாமலே செத்துப்போனது. இவைபற்றி சிங்கள அரசு அச்சப்பட்டதாகவே தெரியவில்லை.

புலிகள் இயக்கத்தை உடன்பாடு வாயிலாகசமபங்காளியாகஏற்றுக்கொண்டே போர்நிறுத்த ஒப்பந்தத்தை வரைந்தது. ஆனால் போரால் சிதைந்த இலங்கைத் தீவை புனரமைத்து அபவிருத்தி செய்யும் இலக்குடன் உதவி வழங்கும் நாடுகள் கூட்டிய வோஷிங்டன், டோக்கியோ போன்ற மாநாடுகளுக்குப் புலிகளையும் அழைத்துச் செல்ல சிங்கள அரசு மறுத்து அது தனியே சென்று பங்கு பற்றியது. சிங்கள அரசின் இந்த ஏமாற்று அரசியலை புலிகள் கடுமையாக ஆட்சேபித்தனர். இறுதியில் இலங்கைக்கு உதவுவதாக வாக்களிக்கப்பட்ட அந்தப் பெரும் நிதியும் முடங்கிப்போனது.தமிழர் தேசியத்திற்கு எதிராக தமிழ்க் ●ழுக்களைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளைக் குழப்புவது சிங்கள அரசின் வழமையாகும். இதைக் கருத்திற்கொண்டு சமாதானத்தின் ஆயுளை உறுதிப்படுத்தும் நல்லெண்ணத்துடன் தமிழ்க் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு தமிழர் தாயகத்திற்கு வெளியே அவை அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்று புலிகள் விரும்பியதை உடன்பாட்டில் இணைத்து சிங்கள அரசும் எற்றுக் கொண்டது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் போர் நிறுத்த ஒப்பந்த விதிகளை சிங்கள அரசு சிறிதும் கடைப்பிடிக்கவில்லை. புலிகளை மீண்டும் போருக்கு இழுக்கும் ஒரு சதிக்களமாகவே கிழக்கு மாகாணத்தை அரசு பயன்படுத்துகிறது. அங்கே போராளிகளைப் படுகொலை செய்தல், மக்களைக் கொல்லுதல், தேசப்பற்றாளர்களை அழித்தல் என்ற ஒரு கொலை அரசியலை நடத்தி வருகின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள புலிகளின் அரசியல் அலுவலகங்கள் மீதும் ஆயுதத் தாக்குதல்களை அவை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றன. தமிழ் – முஸ்லீம் உறவைச் சீர்குலைக்கும் வகையில் திட்டமிட்ட கொலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அரசியல் தீர்வு என்பதில் அதன் ஆரம்ப கட்டத் திற்குள் நுழைவதையே சிங்கள அரசு விரும்பவில்லை. தீர்வுத் திட்டம் என்ற பெயரில் சிங்கள அரசு சமர்ப்பித்த திட்டங்கள் தமிழர் தேசியத்தைச் சிதைப்பதையே குறியாகக் கொண்டுள்ளன. போர் இல்லாமல் – அமைதி வழியில் சிங்கள மேலாண்மைக்குள் தமிழ் மக்களைக் கொண்டு வரும் அரசியல் சதிகளாகவே அந்தத் தீர்வுக்கான திட்டங்கள் அமைந்துள்ளன. இவற்றையெல்லாம், புலிகள் இயக்கம் அடியோடு நிராகரித்த போது புலிகள் இயக்கம் ஒரு தீர்வுக்கான திட்டத்தை முன்மொழிய வேண்டும் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்த்தது. அதற்கேற்ப தமிழ் அறிஞர்கள் சர்வதேச சட்ட வல்லுநர்கள் துணையுடன் ஒரு அரசியற் திட்டத்தை புலிகள் முன்வைத்தனர். ''இடைக்காலத் தன்னாட்சி அதிகாரத்துவ அவை'' என்று பெயர் சூட்டி புலிகள் இயக்கம் முன்வைத்த தீர்வுக் ான திட்டத்தை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டது.

ஆனால் சிங்கள தேசம் அதை ஒட்டுமொத்தமாக நிராகரித்தது. தென்னிலங்கையின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. சந்திரிகா அம்மையார் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இலங்கைத் தீவின் இறையாண்மைக்குக் குறுக்கே நிற்காது, அதேசமயம் தமிழரின் அரசியல் விருப்பங்களை நிறைவேற்ற முனையும் அந்த மாதிரி அரசியல் வரைவை சிங்களதேசம் ஏற்க மறுத்த விதம் சர்வதேச சமூகத்தை கவலைக்குள்ளாக்கி விட்டது.

அமைதி வழி முறையில் தமிழ் – சிங்கள தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வுதேடும் நோக்குடன் உருவாக்கப்பட்ட போர் நிறுத்த உடன்பாடு இவ்விதம் செயலற்ற தன்மையுடன் நகர்ந்தது. காலம் கழிவதை புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அது இன்று வரை பொறுமையைக் காத்துவருகின்றது.

சிங்கள அரசுக்கு மேலும் மேலும் சந்தர்ப்பங்கள் வழங்கும் நோக்குடன்



அடுத்தடுத்து விட்டுக்கொடுப்புகளைச் செய்து பல ஆலோசனைகளையும் புலிகள் முன்வைத்து வருகின்றனர். ஆயினும் தனது கடும் போக்கிலிருந்து இனவாத சிந்தனையிலிருந்து சிங்கள அரசு விடுபடுவதாகத் தெரியவில்லை.

இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சியில் மூன்றாந் தரப்பாக இருந்து கொண்டு சமாதானப் பேச்சுகளுக்கு நடுநிலையாளராக செயற்பட்டுவரும் நோர்வே அரசின் பிரதிநிதிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து கலந்துரையாடி கருத்துப் பரிமாற்றங்களைச் செய்துள்ளனர்.

சிங்கள அரசு ஒப்பந்த மீறல்களைச் செய்து கட லிலும் தரையிலும் புலிகள் இயக்கத்திற்குப் பல உயிர் இழப்புகளை ஏற்படுத்தி வருகின்றபோதும் சமாதான முயற்சிகளை அர்த்தமுள்ளதாக மாற்றச் செய்வதில் தலைவர் பிரபாகரன் காட்டும் அக்கறையையும் விட்டுக்கொடுக்கும் போக்குகளையும்நோர்வே தரப்பு புகழ்ந்துரைத்து வருகின்றது.

## இணையப்பார்வை

சமாதான முயற்சிகளின் தற்போதைய தேக்கநிலைக்குப் புலிகளை எவரும் குற்றம் சாட்டவில்லை. மாறாக சிங்கள அரசையே அவை குறை கூறி வருகின்றன. இதனால் மேற்குலக நாடுகள் மீது சிங்களப் பேரினவாதிகள் வசைமாரி பொழியத் தொடங்கியுள்ளனர்.

முற்றிலும் மனிதாபிமான சேவைகளை நோக்கமாகக் கொண்ட ஆழிப்பேரலை அழிவு பொதுக் கட்டமைப்பையே ஏற்றுக் கொள்ளாது முரண்டு பிடிக்கும் சிங்கள அரசு எவ்வாறு தமிழருக்கான ஒரு அரசியல் நிர்வாகத் தொடர்பாகப் பேசப்போகின்றது என்பதே இன்றைய கேள்வியாகும்.இந்தக் கேள்வி இதுவரை காலமும் தமிழர் தரப்பையே வாட்டி வுந்தது. இப்போது முதல் முறையாக இக்கேள்வி சர்வதேச சமூகத்தையும் வாட்டத் தொடங்கிவிட்டது. (ற)

## கவிதை நூல் வெளியீடு

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில முன்னாள் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகக கடமையாற்றியவரும் கவிஞருமான நெடுந்தீவு செ.மகேஸ் எழுதிய “மனிதத்தைத் தேடி” என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று மாலை 2.00 மணியளவில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை ரதிலக்சுமி அரங்கில் யாழ்.தேசிய கல்வியயற் கல்லூரி முதல்வர் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருத்தினராக யாழ்பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணியும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் க.ஆர்வலன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கவிஞர் நெடுந்தீவு லக்ஷமனும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-2)

## எரிபொருட்களின் விலை அதிகரிப்பால்
# ரயில்வே திணைக்களத்திற்கு மேலதிகமாக ரூ.24 கோடி நஷ்டம்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் ரயில் கட்டணங்களை உயர்த்துவதற கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று ரயில்வே திணைக களத்தின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இரண்டு தடவைகள் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதால் ரயில்வே திணைக்களத்திற்கு மேலதிகமாக 24 கோடி ரூபா நஷ்டம் ஏற்படுகிறது.

ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கும் ஏனைய செலவினங்களுக்குமென ரயில்வே திணைக்களம் 450 கோடி ரூபாவை வருடாந்தம் செலவிட்டு வருகிறது. எனவே திணைக்களத்தின் நிதித் தேவைக்கு திணைக்களம் திறைசேரியிலேயே பெரிதும் தங்கியிருக்கிறது.

ஒரு நாளில் 3 இலட்சத்து 25ஆயிரத்திற்கும் அதிகமானோர் ரயிலில் பிரயாணம் செய்கின்றனர் என்றும் ரயில்வே திணைக்களப பொது முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-2)

# நிர்வாக சேவைக்கு மேலும் நானூறுபேர் பொதுச் சேவை ஆணைக்குழு அனுமதி

(கொழும்பு)

அரச நிர்வாக அதிகாரிகளுக்கான பறறாக்குறையை தீர்க்கும் வகையில் புதிய அதிகாரிகளை நியமிப்பதற்கான அனுமதியை அரசாங்க சேவை ஆணைக்குழு வழங்கவுள்ளது.

புதிய நிர்வாக சேவைக்கு 400 பேர் தயமிக்கப்பட இருப்பதாக அரச சேவை ஆணைக் குழுவின் செயலாளர் லக்ஷ்மி குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக நிலவி வரும் நிர்வாக அதிகாரிகள் பற்றாக்குறையினால் அரச அலுவல்களை மேற்கொள்வதில் பல சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாக பொது நிாவாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

நிர்வாக அதிகாரிகளை சேர்த்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை விரைவில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படடிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# சனிப் பெயர்ச்சி

**27.06.2005ஆம் திகதி சனிபகவான் மிதுன ராசியினின்று கடக ராசிக்குச் செல்கிறார். இந்த சனிப் பெயர்ச்சியால் 12 இராசிக்கும் 27 நட்சத்திரங்களுக்கும் உரிய பலன்களும் கடைப் பிடிக்க வேண்டிய பரிகாரங்களும் இங்கே தரப்படவுள்ளன.**

# உங்களுக்கு எப்படி?

## சிங்கம்

*சிவந்த கண்கள் கொண்டு எதிலும் முரட்டுத் தனமாகவும் பிடிவாதக் குணத்துடனும் செயல்படும் சிம்ம ராசி நேயர்களே!*

உங்களுக்கு வாக்கிய சித்தாந்தபடி வரும் 27.06.2005 ஆம் திகதி சனி விரைய ஸ்தானத்திற்கு மாறுதலாவதால் உங்களுக்கு ஏழரைச்சனி தொடங்குகிறது. உங்களின் சுபாவத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். குறிப்பாக உங்களின் முரட்டுத் தனத்தைக்கூட ஆள்பார்த்து நடந்து கொள்ள வேண்டும். உங்கள் ராசியாதிபதி சூரியனுக்கு சனி பகைவர் என்பதால் ஏழைரைச்சனி என்பது உங்கள் அமைதியினைக் குறைக்கும் தேவையில்லாத செலவுகளும் ஒரு இடத்தில் நிலையாக இருக்கமுடியாத அளவிற்கு இன்னல்களும் ஏற்படும். ஏழரைச்சனி மட்டும் இன்றி ஆண்டுக்கோள் என்ப வர்ணிக்கப்படும். குருபகவான் வரும் 19.09.2005முதல் 20.10.2006முடிய 3ஆம் வீட்டிலும் 21.10.2006முதல் 16.11.2007முடிய 4ஆம் வீட்டிலும் சஞ்சாரம்செய்ய இருப்பது எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல் உங்கள் சோதனைகளை அதிகரிக்கும் குரு சனி மட்டுமின்றி சர்ப்பகிரகமான ராகு கேது 4.3.2005முதல் 21.09.2006முடிய கேது 2லும் ராகு 8லும் அதன் பிறகு 21.09.2006முதல் 10.04.2008 முடிய ஜென்ம ராசியில் கேது 7இல் சஞ்சாரம் செய்ய உள்ளதால் உங்கள் குடும்ப வாழ்வில் இல்லற வாழ்வில் அமைதி குறையும். கிரகநிலை அனுகூலமற்று உள்ளதால் நீங்கள் எதிலும் நிதானத்தினைக் கடைப்பிடிப்பது உத்தமம். சனிபகவானுக்குப் பரிகாரம் செய்தால் உங்களது சோதனைகள் குறையும்.

**உடல் ஆரோக்கியம்:** உடல் நலத்தில் உஷ்ணசமபந்தமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் சிலருக்கு கண்களில் பாதிப்பு, நீர் ஒழுகுதல், தலைவலி உண்டாகலாம். அதிகமான மருத்துவச்செலவுகள் மனைவி புத்திரர்களின் வழியில் ஏற்படககூடும். சில புதிய புதிய பிரச்சினைகளால் சோர்வடைவீர்கள் இடமாறுதலால் அலைச்சலும் வீண் தொல்லைகளாலும் மன அமைதி குறையும்.

**கொடுக்கல் வாங்கல்:** கொடுககல் வாங்கலில் அனுகூலமற்ற பலன்களும் நெருக்கமானவர்களே விரோத மனப்பான்மையுடன் ஏமாற்ற எண்ணுவார்கள். பெரிய தொகைகளையும் முன் ஜாமீனையும் யாருக்கும் தருவது கூடாது அசையா சொத்துக்களை சிலர் விற்க நேரிடும். வண்டி வாகன வழியில் செலவுகள் உண்டாகும். வம்பு வ்ழக்குகளால் பணவிரயம் அதிகமாகுமே தவிர சாதகப்பலனை அடைய முடியாது. பொருளாதார நிலையில் பற்றாக்குறை ஏற்படும்.

**தொழில் வியாபாரம்:** தொழில் வியாபாரநிலையில் வெற்றி வாய்ப்புகள் குறையும். பயணங்கள் அதிகரிக்கும் லாபத்தை எதிர்பார்க்க முடியாது. மந்தமான நிலையில் தொழிலை விட்டுவிடாமல் பார்ப்பீர்கள். புதிய முதலீடுகளைச் செய்வது புதிய தொழில் வியாபாரம் தொடங்குவது போன்றவற்றில் புதிய புதிய பிரச்சினைகள் உருவாகும். பண நஷ்டம் ஏற்படும். இடமாறுதலும் உண்டாகும். கூட்டாளிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் தோன்றும்.

**உத்தியோகஸ்தர்களுக்கு:** உத்தியோக ரீதியாக உங்களுக்கு விருப்பம் இல்லாத இடத்திற்கு மாறவேண்டிய சூழ்நிலை உண்டாகும். சிலர் அடிக்கடி பயணம் செய்து அதனால்அலைச்சலைச்சந்திப்பார்கள்.அதிகாரிகளின் உதவியை பெறுவதில் சிக்கல்கள் தோன்றும். உடன் ஊழியர்களை மிகவும் அனுசரித்துப் போக நேரிடும் புதிய வேலை வாய்ப்புகள் அமையாது. வெளிநாட்டுப் பணியில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு கூடும்.

**பெண்களுக்கு:** உடல் நலம் சீராக அமையாது. அடிக்கடி சிறு சிறு உடல் உபாதைகளை அடைவீர்கள். பயணங்களால் சோர்வும் பணவிரயமும் அதிகரிக்கும். கணவன் மனைவி இடையில் புதிதாக பல பிரச்சினைகள் ஏற்பட்டு ஒற்றுமை பாதிப்படையும் திருமண சுபகாரிய முயற்சிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் உற்றார் உறவினர்களின் உதவி தக்க சமயத்திற்கு அமையாது. பிள்ளைகளால் மனதில் சஞ்சலம் உண்டாகும். தாய்வழியில் மனஸ்தாபம் உண்டாகும்.

**மாணவ மாணவியருக்கு:** பாடங்கள் மனதில் சரிவர பதியாது. மதிபபெண்குறையும். சிலருக்கு நெருக்கமான நண்பர்களால் வீண்பழி ஏற்படும். எதிர்பாராமல் கண்களில் சிறு சிறு பாதிப்பு ஏற்பட்டு கண்ணாடி அணியவேண்டிய சூழ்நிலைகள் வரலாம். வெற்றிபெற வேண்டும என்ற உங்களது முயற்சிகளில் குறைபாடுகள் தோனறும். ஆசிரியர்கள் கற்பிக்கும் போது கூர்ந்து கவனித்து புரிந்து கொண்டு முயற்சி எடுத்து பழக்க வேண்டியது அவசியமாகும்.

**கலைஞர்களுக்கு:** தனவரவுகள் போட்டி பொறாமையாளர்களால் தடைப்படும். எந்த ஒரு செயலையும் முழுமையாக முடிக்க முடியாதபடி இடையூறுகள் நிலவும் குடும்பத்திலும் சில புதிய பிரச்சினைகள் உண்டாகும். நல்ல வாய்ப்புகளை வீணாக நழுவ விடுவீர்கள். பெயர் புகழ் பாதிப்படையும். எதையும் நிதானமாகவும் விடா முயற்சியாகவும் செய்துமுடிக்க வேண்டும்

**பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு:** அரசியலில் உடன் இருப்பவர்களால் சிக்கல்களில் சிக்கிக்கொள்ள நேரிடும். செல்வம் செல்வாக்கு குறைந்து உங்கள் பேச்சுக்கு மரியாதை அவ்வளவாக இருக்காது கடந்த காலத்தில் அடைந்த வெற்றியினை தற்போது அடைய முடியாது. எதிலும் எசசரிக்கையுடன் செயல்படவேண்டும்.

**தொழிலாளிகளுக்கு:** வேலை கிடைத்தாலும் அதனைச் சரிவர செய்ய உடல் நலம் இடம்தாரது. உடல் நலமாக இருக்கும்போது வேலை அமையாது. புதிய வேலை அமைவதில் பிரச்சினைகள் தோன்றும். வருமானம் குறையும். கடன்கள் விரயங்களாகவே தான் இக்காலத்தில் ஏற்படும்.

**சனிபகவான் குரு சாரத்தில் புனர்பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**
**27.06.2005முதல் 21.07.2005வரை**

இக்காலத்தில் உங்களுடைய முயற்சிகளுக்கு சிறு சிறு இடையூறுகளை ஏற்படுத்தும். உடல் நலனில்அக்கறைசெலுத்தினால் நலம் அடைவீர்கள். மனைவி மற்றும் குழந்தைகளின் நலம்படிப்படியாக தேறிவிடும். மருத்துவச் செலவுகள் குறையும் பொருளாதார நிலையில் தனவரவுகள் நிறைய வந்தாலும் செலவுகளும் அதற்கு ஏற்ப அமையும். சேமிக்கமுடியாது குடும்பத்தில் கணவன் மனைவி இடையில் திருப்தியான உறவு காணப்படும். கொடுக்கல் வாங்கலில் சிறிதளவு அனுகூலத்தை பெறுவீர்கள். திருமண சுபகாரியம் முயற்சியை மேற்கொள்ள முடியும். தொழில் வியாபார நிலையில் இதுவரை நிலவிய சோதனைகளை எளிதாக வெற்றி கொள்ளமுடியும். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளிடையில் சிறு சிறு வாக்குவாதம் ஏற்பட்டாலும் கூட பெரிய அளவு ஏற்படாது. லாபமும் சுமாராக அமையும். உத்தியோக ரீதியாக வேலைப்பளுவும் அலைச்சலும் கூடினாலும் அனுகூலம் கிட்டும்.

**சனிபகவான் சனி சாரத்தில் பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**
**22.07.2005முதல் 19.11.2005வரை**

உங்களுக்கு சோதனைகளை ஏற்படுத்தும் அமைப்பாகும். உடல்நலம் உஷ்ண சம்பந்தமான பாதிப்புகளை அடையும் கண எரிசசல் சரியாக உறக்கம் இல்லாதநிலைகளும் வயிற்று உபாதைகளையும் ஏற்படுத்தும். மனைவிக்கு கர்ப்பக் கோளாறுகளும் பிள்ளைகளின் வழியில் மன சஞ்சலமும் உண்டரகும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் பண நெருக்கடிகளால் கடன்பெற வேண்டிய சூழ்நிலைகளும் நெருக்கமானவர்களைப் பகைதது்க்கொள்ளவும் நேரிடும் திருமண சுபகாரியம் தடைப்படும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல்களல் மாட்டிக்கொள்ள நேரிடும். தொழில் வியாபார நிலையில் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். முதல் முடக்கமாகும். கொள்முதல் பொருட் கள் தரமற்றதாக அமையும். கூட்டுத் தொழிலில் கூட்டாளிகளிடம் கருத்து வேறுபாடுகள் தோன்றும். உத்தி யோக நிலையில் பதவி உயர்வு ஊதிய உயர்வுகள் தடைப்படும். மாணவர்களின் கல்வியில் தடைநிலவும்.

**சனிபகவான் வக்ரகதியில் சஞ்சரிக்கும் காலம்**
**20.11.2005முதல் 06.04.2006வரை**

இக்காலமும் உங்களுக்கு சோதனையான காலமே ஆகும். மனதில் சில குழப்பமும் அமைதியற்ற சூழ்நிலைகளை உண்டாக்கும். உடல் நலமும் சரியாக அமையாது. மனைவி மற்றும் குழந்தைகளின் உடல் நலமும் மிகவும் சோர்வாக அமையும். மருத்துவச் செலவுகளை அதிகம் ஏற்படுத்தும். குடும்பத்தில் பொருளாதார நிலையில் நெருக்கடிகளை ஏற்படுத்தும். கடன்களால் அதிக சோதனைகளை ஏற்படுத்தும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக செயல்பட வேண்டும். தேவையில்லாத சிக்கல்களை ஏற்படுத்தும். தொழில் வியாபார நிலையால் கடுமையான போட்டிகளைச் சந்தித்து நலிவை ஏற்படுத்தும். அரசு மூலம் எதிர்பாராத சோதனைகளை ஏற்படுத்தும். வாகனங்களில் போகும் போது மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும் உத்தியோக நிலையில் அதிகாரிகளின் கெடுபிடிகளும் அலைச்சல் இடமாறுதலையும் சந்தித்திடநேரிடும். விவசாயிகளுக்கு பயிர்ச்சேதம் உண்டாகி கடன்அதிகரிக்கும்.

**சனிபகவான் சனி சாரத்தில் பூசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**
**07.04.2006 முதல் 27.07.2006வரை**

நீங்கள் எதைச் செய்வதாக இருந்தாலும் மிகவும் எச்சரிக்கையுடன் செய்வது நல்லது. எடுக்கும் காரியத்தல பலவிதமான இடையூறுகள் உண்டாகும்.உடல் நலமும் சிறப்பாக அமையாது. எதேனும் ஒரு கோளாறு மாறி மாறி வந்து தொல்லைதரும். மனைவிக்கும் மாதவிடாய் கோளாறுகள் பிரசவத்தில் சிக்கலை ஏற்படுத்தும். புத்திரர்களின் வழியில் மனசஞ்சலம் உண்டாகும். உங்களுக்கு உற்றார் உறவினர்கள் நண்பர்களால் உதவி இருக்காது வீணாக பகை முகமகாட்டுவார்கள். அசையாசொத்து வகையில் செலவுகள் பூர்வீக வழியில் வம்பு வழக்குகள் ஏற்பட்டு மன அமைதி குறையும் திருமண சுபகாரியம் தடைப்படும். தொழில் வியாபாரம் கூட்டுத் தொழில வியாபாரம் கமிஷன் ஏஜன்ஸிகானடிராக்ட் போனறவற்றில் நலிவும் பொருள் தேக்கமும் ஏற்படும். லாபம் இருக்காது. உத்தியோக நிலையில் எதிர்பாராத இடமாறுதலை கொடுத்து அலைச்சல் ஏற்படுத்தும்.

**சனி பகவான் புதன் சாரத்தில் ஆயிலியம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**
**28.07.2006 முதல் 2.12.2006வரை**

மேலும் மேலும் கவலைகளையும் கஷ்டங்களையும் அடைவீர்கள். நெருங்கியவர்கள் மறைமுகமான எதிரிகளாவார்கள். உடல் நிலையும் பாதிப்படையும். குறிப்பாக மனைவி வழியில் மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ள நேரிடும். புத்திரர்கள் உங்கள் பேச்சைக்கேட்டு நடக்கமாட்டார்கள். குடும்பத்தில் கூச்சலும் குழப்பமும் நிலவும். எடுக்கும் காரியங்கள் திருமண சுபமுயற்சிகளும் தடைப்படும். பொருளாதார நிலையில் பற்றாக்குறையும் கடன் பிரச்சினைகளும் மன அமைதியை குறைக்கும். கணவன் மனவைி சகோதரர் ஒற்றுமை பாதிக்கும் தொழில் வியாபார நிலையில் கடுமையான சோதனைகளை ஏற்படுத்தும். நலிவும் கூட்டாளிகளால் அதிகமான அனுகூலமற்ற போக்கும் நிலவும். உத்தியோக நிலையில் பதவி உயர்வு ஊதிய உயர்வினை எதிர்பார்க்க முடியாது. புதிய வேலை அமையாது. மாணவர்கள் மந்தமடைவார்கள்.

**சனி பகவான் வக்ரகதியில் சஞ்சரிக்கும் காலம்**
**03.12.2006முதல் 19.04.2007வரை**

இக்காலத்தில் முழுவதும் சோதனையாகவே அமையும். குடும்பத்தில் உடல் நலக்கோளாறுகளால் மருத்துவச் செலவுகளை எதிர்கொள்வீர்கள். அடிக்கடி வெயியூர் பயணம் ஏற்பட்டு அலைச்சலும் சோர்வும் பண விரயமும் உண்டாகும். பொருளாதார நிலையில் தடைகள் ஏற்பட்டு பணவரவு பாதிக்கும் கடன்கள் அதிகளவான பிரச்சினைகளையும் நெருக்கமானவர்களே விரோதமாக செயல்படுவார்கள். கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரையும் அனுசரித்துப்போக வேண்டியது மிக அவசியம் திருமண சுபகாரியம் தடைப்படும். தொழில் வியாபார நிலையில் மறைமுக போட்டியும் பொறாமைகளும் அதிகரித்து மன அமைதியும் லாபமும் இருக்காது. கூட்டாளிகள் பிரச்சினை செய்வதுடன் பிரிவையும் சந்தித்திட நேரிடும். உத்தியோக நிலையில் அதிகாரிகளின் அலட்சியபோக்கு எதிர்பாராத இடமாற்றமும் ஏற்படும். புதிய வேலை அமையாது. மாணவர்களுக்கு மதிப்பெண் குறையும்.

**சனிபகவான் புதன் சாரத்தில் ஆயிலியம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**
**20.04.2007முதல் 05.08.2007வரை**

உங்களுக்கு இக்காலத்தில் பண ரீதியாக முடக்கமும் தடைகளையும் ஏற்படுத்தும். எனவே பொருளாதார நிலை மிகவும் பாதித்து கடன்கள் அதிகரிக்கும். சில கடன்களால் அதிக பிரச்சினை ஏற்படும். சிலர் ஸ்திர சொத்தினை விற்பதோ பழைய வாகனத்தை விற்கவோ செய்வார்கள். கணவன் மனைவி இடையில் சாதகமற்ற நிலையும் குடும்பத்தில் குழப்பமும் நிலவும். எடுக்கும் எந்த ஒரு செயலும் தடைப்படும். திருமண சுப காரியத்தை தவிர்ப்பது மிகவும் நல்லது. உடல் நலமும் உஷ்ண சம்பந்தமானவற்றால் பாதிக்கும். மருத்துவ செலவு அதிகரிக்கும். தொழில் வியாபாரநிலையில் மிகவும் மந்தமான நிலையும் லாபம் இல்லாத சூழ்நிலையும் போட்டி பொறாமைகளும் ஏற்படும். உத்தியோக நிலையில் மற்றவர்கள செய்த தவறுக்கு நீங்கள் தண்டனையை அடைய நேரிடலாம். எச்சரிக்கையுடன் செயல்படுவது மிகவுமநலலதுமாணவர்களுக்கு மதிப்பெண்குறையும்.

**அதிர்ஷ்ட குறிப்புகள**

அதிர்ஷ்ட கிழமை: ஞாயிறு, புதன்
அதிர்ஷ்ட நிறம்: கருஞ்சிவப்பு, ரோஸ்
அதிர்ஷ்ட தெய்வம்: சிவன் அதிர்ஷ்ட
திசை: கிழக்கு
அதிர்ஷ்ட கல்: மாணிக்கம்

(தொடரும்)

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

கலாநிதி செ-திருநாவுக்கரசு 30


1. தமிழர்கள் தனியானதோர் தேசிய இனமாகக் கணிக்கப்படல்.
2. தமிழர் தாயகக் கோட்பாட்டினுக்கு அங்கீகாரமளித்தல்.
3. தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல்.
4. பெருந்தோட்டத் தமிழர்களுக்குப் பூரண குடியுரிமை வழங்கல்.


துரதிஷ்டவசமாகத் திம்புப் பேச்சுவார்த்தை முறிவடைந்தது. தமிழ் மக்கள் சார்பிலான வேண்டுகோள்கள் புறக்கணிக்கப்பட்டதாகவே கிடக்கின்றன. இந்திய நடுவன் அரசின் தலையீட்டால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமும் உரிய பலனை அளிக்காதது மட்டுமல்ல புதிய பல பிரச்சினைகளையும் கிளப்பி விட்டுள்ளது. ''நண்பர்களும் பகைவர்களும்'' யாரென இனங்காண முடியாதவாறு அரசியற் சதுரங்கம் ஆடப்பட்டது. ஆனாலும் இலங்கை நாட்டிற்கோ சமாதானம் கிடைக்கவில்லை. அதற்கான முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. இத்தகு நிலையில் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் இயல்பு நிலை வாழ்க்கையானது பெரிதும் பாதிக்கப்பட்டே வருகின்றது. வன்முறைகள் ஒய்ந்தபாடில்லை. அரசபடைகளுக்கும் போராளிகளுக்குமான மோதல்கள் தொடர்கின்றன. இந்துசமுத்திரத்தின் நித்திலமென்றும் தம்மதுவீபம் என்றும் அழைக்கப்பட்ட நாட்டின் ஒரு பகுதியில் இரத்த ஆறு ஓடுகிறது. அதன் எதிரொலியாக முழுநாடும் பாதிக்கப்படுகிறது. தர்மம் இங்கே தழைக்கவேண்டுமாயின் சமாதானம் மலரவேண்டும். அது மலருமா? காலம்தான் பதில் கூறவேண்டும்.


*(முதற்பாகம் முற்றிற்று)*

**இதுவரையில் 1990ஆம் ஆண்டு வரையிலான இலங்கையின் அரசியல் வரலாறு பற்றிய கண்ணோட்டத்தை நாம் பார்த்தோம். அதற்குப் பிந்தியதும் சமகாலத்தையுள்ளடக்கியதுமான அரசியல் வரலாறும் இனப்பிரச்சினையின் மீதான தாக்கமும் குறுகிய காலப்பகுதியில் தொடராக வெளிவரும். அதுவரை வாசகர்கள் பொறுத்திருப்பார்களாக.**

**(ஆ-ர்)**









**நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற சந்திப்பின் பிற்பாடு நோர்வே தூதுவரிடம் மகஜர் கையளிப்பதற்காக வருகை தந்த கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளையும், இவர்களை சு.ப.தமிழ்ச்செல்வன் சந்தித்துக் கலந்துரையாடுவதையும், எதிர்பார்ப்புடன் வந்த பத்திரிகையாளர்களுக்கு நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் கருத்துத் தெரிவிப்பதையும் படங்களில் காணலம். (படங்கள்:ஞா.ஐங்கரன்)**

## சுனாமி அனர்த்தப் பகுதிகளில்
# பணியாற்றும் கிராம சேவையாளருக்கு விஷேட மேலதிகக் கொடுப்பனவு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேவையாற்றி வரும் கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு விஷேட மேலதிக கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திறைசேரியின் செயலாளர் பி.வி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த திறைசேரிச் செயலாளர் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 3ஆம் கட்டமாக 5000 ரூபா கொடுப்பனவை வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் சகல தரப்பினருடனும் பி.வி.ஜெயசுந்தர தலைமையிலான குழுவினர் பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராய்ந்தனர். இக்கலந்துரையாடலில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோ தித்தவெல, நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், மட்டக்களப்பு அரச அதிபர் வே.சண்முகம், கிராம சேவையாளர்கள், வங்கியாளர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ந-8)

# ஆசிரியர் பதவி உயர்வில் பாரபட்சம் இல்லை

(கொழும்பு)

ஆசிரியர்கள் பதவி உயர்வு தொடர்பாக வழங்கப்பட்ட சுற்றுநிருபம் ஆசிரியர்களுக்கு பெரும் நன்மையளிக்கும் என்று கல்வி அமைச்சு கருதுகிறது.

புதிய சுற்றுநிருபப் பிரகாரம் தேசிய, மாகாணசபைப் பாடசாலை அதிபர்களுக்கு எந்தவித பாரபட்சமும் இல்லாமல் பதவி உயர்வுகள் வழங்கப்படும். தற்சமயம் தரம் 1 சேவையில் உள்ள 30,000 ஆசிரியர்கள் பதவி உயர்வு பெறும் தகுதியில் உள்ளனர்.

கிராமப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 1500 தொடக்கம் 2500 ரூபா வரையில் செலவுப்படி வழங்கப்படும்.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், சுமார் 5000 ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவிருக்கிறார்கள்.

புதிய சுற்றுநிருபப் பிரகாரம் 30,000 பட்டதாரிகளும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் நிரந்தர நியமனங்களைப் பெறுவார்கள். ஆசிரிய பயிற்சிக்கல்லூரிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் நியமனங்கள் வழங்கப்படும். (அ-2)

# வடமராட்சி வடக்கில் 8 பிரிவுகளுக்கு நிரந்தர கிராம சேவையாளர் இல்லை

(தென்மராட்சி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 35 கிராம சேவையாளர் பிரிவுகளில் 8 பிரிவுகளுக்கு நீண்டகாலமாக நிரந்தர கிராம சேவையாளர்கள் இல்லாத நிலை தொடர்ந்து வருகின்றது.

இதன் காரணமாக மேற் குறித்த 8 கிராம சேவையாளர் பிரிவுகளில் வாழ்கின்ற குடும்பங்களுக்கான பணிகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள முடியாத நிலையும் காணப்படுவதால் அப்பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்கள் நிர்வாக ரீதியிலான பின்னடைவுகளை எதிர்கொள்வதாகவும் தெரியவருகின்றது.

இதேசமயம், இப் பிரதேசத்தில் கிராம சேவையாளர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக குறிப்பிட்ட ஒரு சில கிராம சேவையாளர்கள் இரண்டு மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான பதில் கடமைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறுப்படுகின்றது. (அ-16)

## ஒரு குடையின் கீழ் அணி திரள்வோம்
# சங்கம நிகழ்வில் இசைச்செல்வன் சூளுரை

(புங்குடுதீவு)

"எமது விடுதலைப் போராட்டம் வெற்றி பெறவேண்டுமானால் தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்த நாம் அனைவரும் ஒரு குடையின் கீழ் அணிதிரள வேண்டும்'' என்று கடந்த வெள்ளிக்கிழமை காலை நாரந்தனை றோ.க. பாடசாலையில் நடைபெற்ற ஊர்காவற்றுறைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தீவகக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வ.இசைச்செல்வன் தெரிவித்தார்.

தீவக தேசிய எழுச்சிப் பேரவை இணைப்பாளர் எஸ்.ஜெயசிறி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், ஊர்காவற்றுறைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். ஈழமாறன் பொதுச்சுடரினை ஏற்றி வைக்க, மாவீரர்களுக்கு மலரஞ்சலி நடைபெற்றது.

"விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகி 30 ஆண்டுகளுக்கு மேலாகி விட்ட போதிலும் எம் மக்களது சோகவாழ்வு நீங்கவில்லை. இப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களையும் 18ஆயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களையும் இழந்திருக்கிறோம். பல்லாயிரக்கணக்கான பெண்கள் விதவைகளாக்கப்பட்டும் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் அநாதைகள் ஆக்கப்பட்டும் உள்ளனர். மக்கள் தம் சொந்த மண்ணில் மீளக் குடியமர முடியாதவாறு பாதுகாப்பு வலயம்என்ற போர்வையில் பல்லாயிரக் கணக்கான சிங்கள இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டிருக்கிறார்கள். 6 மாத காலத்திற்கு மேலாகியும் சுனாமியால் பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு எவ்வித உதவியும் வழங்கப்படவில்லை. இந்நிலை மாறவேண்டுமானால் தமிழ மக்கள் அனைவரும்ஒன்று சேர்ந்து நம் தலைவரின் கரங்களைப் பலப்படுதத வேண்டும்''என இசைச்செல்வன் மேலும்தெரிவித்தார். (து-126)

# மேல் மாகாண முதலமைச்சராக நந்தன மெண்டிஸ்

(கொழும்பு)

மேல்மாகாண சபையின் புதிய முதலமைச்சராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நந்தன மெண்டிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் மாகாண ஆளுநர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அதிக பெரும்பான்மை கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதையடுத்து முதலமைச்சராக நந்தன மெண்டிஸ் தெரிவானார். (ச-8)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 56



நம்மை வணங்கிப் புகழ்கின்றவர்கள் நமது புண்ணியத்தில் ஒரு கூறு எடுத்துக்கொள்கிறார்கள். நம்மை அகாரணமாக நிந் திக்கின்றவர்கள் நாம் செய்த பாவத்தில் ஒரு கூறு எடுத்துக் கொள்கிறார்கள். அவ்வாறு எடுத்துக்கொள்வதன்றி அவர்கள் செய்த புண்ணியத்திலும் ஒரு கூறு நமக்குத் தருகிறார்கள். இந்தக் கருத்தை பீஷ்மர் சரசயனத்தில் கிடந்து பாணடவர்களுக்கு உபதேசம் செய்த பகுதியில் காணலாம்.

ஆதலால் அறிவுள்ள ஒருவன், காரணமின்றி ஒருவன் வைவா னானால்; வைகின்றவனை வெறுக்கக்கூடாது. அவனை உப காரியாக நினைக்கவேண்டும். நான் படித்ததை வாழ்க்கையில் கடைப்பிடிகக வேண்டுமென்று முயல்கின்றவன். எனவே என்னை நிந்திக்கின்றவர்களை நான் வெறுப்பதில்லை.

1950முதல் 1960வரை 10ஆண்டு காலமாக சிற்பி சௌந்தர பாண்டியரும், அவருடைய நணபரும் என்னைத் திட்டிக்கொண்டு திரிந்தார்கள். 1961இல் சிவகாசியில் விரிவுரைசெய்து கொண்டி ருந்தேன். சௌந்தரபாண்டியன் பிள்ளை அங்கு வந்து என் கால் மேல் விழுந்து வணங்கி நின்றார்.

நான் அகமலர்ந்து, முகமலர்ந்து அன்புடன் இன்னுரை கூறி "எங்கு வந்தீர்கள்!" என்று வினவினேன்.

அவர் "சுவாமிகளைத் தரிசிக்க வந்தேன்" என்று கூறினார். மூன்றுநாள் என்னுடன் இருந்தார். அங்கிருந்து விருது நகருக்கு விரிவுரைசெய்ய வந்தேன். விருதுநகரில் அடியார்களுக்கு அமுது செய்விக்க விருது கட்டிக்கொண்ட என் உழுவலன்பர் திரு. **O.M.S.S.S.**சுந்தரமகாலிங்கம் அவர்களின் இல்லத்தில் தங்கியிருந்தேன்.

சௌந்தரபாண்டியன் பிள்ளை என்னைப் பார்த்து "சுவாமி! நான் கடன்காரனாக இருக்கி றேன. என் கடனைத் தீர்த்து என் கவலையைப் போக்கவேண்டும்" என்று சொன்னார். "எவ்வ ளவு கடன் வைத்திருக்கிறீ?" என்று கேட்டேன். மூவாயிரம் ரூபாய் கடன் இருக்கிறது." என்றார்.

அபபொழுது ஒரு திருப்பணியில் ஈடுபட்டு நான் கடன் காரனாக இருந்தேன். சௌந்தர பாண்டியன பிள்ளையைப் பார்த்து "200,300 என்றால் நான் தந்துவிடுவென். மூவாயிரம் என்றால் இப்போது எனகது அனுகூலமில்லை" என்றேன். அவர் வழிச் செலவுக்குப் பணம் வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

பின்னர் இரண்டாண்டுகள் கழித்து அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். 'நான் தளர்ந்த வயதுடையவனாக இருக்கின்றேன். இன்னும் நீண்ட நாளைக்கு வாழமாட்டேன். கடன்காரனாக நான் மாளக்கூடாது. ஆணவத்தால் சுவாமிகளைப் பகைத்து அல்லல்பட்டேன். இப்பொழுது என்னுடைய பிழையை நன்கு உணர்கின்றேன். எனக்கு 5500 ரூபாய் கடன் இருக்கிறது. இந் தக் கடனை அடைத்து என்னைக் காப்பாற்ற வேண்டும்." என்று எழுதியிருந்தார்.

அக்கடிதத்தைப் படித்து எனது மனம் இரக்கமடைந்தது. துறையூரில் என் ஆப்த நண்பர் ப.மு.மாரிமுத்து முதலியார் அவர்களைத் திருச்சிராப்பள்ளிக்கு வரவழைத்து மரக்கடை ஆ.பொன்னுசாமிப்பிள்ளை கடையில் வைத்து 5500 ரூபாவை மாரிமுத்து முதலியார் கையில் கொடுத்து "சௌந்தரபாண்டியன் பிள்ளையின் கடனைத் தாங்கள் முன்னின்று பைசல் செய்து, பணம் மிகுதிப்படுமானால் அவரிடம்கொடுத்து விடுங்கள்" என்றேன்.

மாரிமுத்து முதலியார் அதன்படி எல்லா கடன்களையும் கொடுத்து எஞ்சிய பணத்தைச் சௌந்தரபாண்டியன் பிள்ளை கையில் கொடுத்து அவருடைய கவலையைத் தீர்த்தார்.

என் வாழ்நாளில் என்னை வைவார் ஒருவரும் இல்லை. அதனால் வைதவர்க்கு உதவும் வாய்ப்பும் அமையவில்லை. இந்த நிகழ்ச்சி வைதவர்க்கும் உதவி செய்யும் வாய்ப்பாக அமைந்தது.

பின்னர் சௌந்தரபாண்டியன் பிள்ளையுடன் சேர்ந்து வைதுகொண்டு திரிந்த அந்த அன்ப ரும் என்பால் உதவிக்கு வந்தார். அவருக்கும் உதவி செய்தேன்.

### பெண்ணறிவு நுண்ணறிவு

பாரதநாட்டின் தலைநகரமாகிய டெல்லியில் உததரசுவாமி மலைத திருப்பணி நடந்து கொணடிருந்தது. அதற்கு நிதி திரட்டும் பொருட்டு என்னை அழைத்திருந்தார்கள். 10நாள் டெல்லியில் தங்கி விரிவுரை செய்தேன்.

பெருந் தகுதியுடையவரும், வயது முதிர்ந்தவருமாகிய ஒரு கணவனும். மனைவியும் சபை யில் ஒரு ஓரத்தில் இரு நாற்காலிகளில் அமர்ந்து விரிவுரையைக் கேட்டு ரசித்துக்கொண்டிருந் தார்கள்.

இறுதி நாளன்று தமிழ் நாட்டிலிருந்து ஓய்வுபெற்ற முதலமைச்சர் எம்.பக்தவத்ஸலம் அவர்களும் வந்திருந்தார். அந்த அம்மையார் கல் இழைத்த மோதிரத்தைத் திருப்பணிக்கு வழங்கினார்.

அந்த மோதிரத்தை ஏலம் போட்டேன். 2000த்துக்கு ஏலத்தில் ஒருவர் மோதிரத்தைப் பெற் றுக்கொண்டார். இந் நிகழ்ச்சி இரவு 11மணிக்கு முடிவு பெற்றது.

அந்த வயோதிபத் தம்பதிகள் அருகில் வந்து வணங்கி விடைபெற்றுககொணடார்கள். அந்த அம்மையார் என்னைப் பார்த்து "சுவாமி! என் வாழ்நாளில் நடந்த ஒரு அரிய நிகழ்ச் சியைக் கூறுகின்றேன்." என்று சொல்லத்தொடங்கினார்.

"ஐயாவும் நானும் கல்கத்தாவில் தங்கியிருந்தோம். ஐயாவுக்குப் பெரிய பதவி. எனக்குத் தாய் வீடு கோவை மாநகரம். எனக்கு 2 ஆண் குழந்தைகள். நான் கோயம்புத்தூருக்குப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

முதல் வகுப்பில் எனக்கு ரயிலில் ரிசர்வ் செய்யப்பட்டது. இளமையின் துடிப்பால் ஊருக்குப் புறப்படும் அன்று மாலை சினிமாவிற்குச் சென்றிருந்தோம். அங்கிருந்து நேரே ரயிலுக்குப் போனோம். ரயில் புறப்பட சில நிமிஷங்கள் இருக்கும் பொழுது ரயில்வே ஸ்டேஷனை அடைந் தோம். ரயிலில் முதல் வகுப்பில் கூபே ரிசர்வ் ஆகியிருந்தது. அதில் குழந்தைகளுடன் ஏறினேன்.

சேவகன் சாமான்களையெல்லாம் வண்டியில் ஏற்றினார். நான் கதவின் அருகில் நின்று கணவனாருடன் பேசிக்கொண்டிருந்தேன்.

ரயில் புறப்பட்டுவிட்டது. கணவனார் கைத்துண்டை எடுத்து அசைத்தார். நான் கைப்பையை எடுத்து அசைத்து மகிழ்ந்தேன். குழந்தைகள் டாடா சொனனார்கள்.

(தொடரும்)

## எயிட்ஸ் நோய் ஆபத்திலிருந்து இலங்கையைப் பாதுகாக்கத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையை எயிட்ஸ் நோயில் இருந்து மீட்கும் வகையில் எயிட் ஸறகு எதிராக போராடுவோம் என்ற திட்டம் ஒன்று நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில் சுகா தார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில, ஆசிய பிராநதியத்திலுள்ள அனை த்து நாடுகளிலும் எயிட்ஸ் நோயி னால் படிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை வேகமாக அதிகரித்து வரு கின்றது.

1987முதல் 2004ஆம் ஆண்டு வரையான காலத்தில் இலங்கையில் 3ஆயிரத்து 600 எயிட்ஸ் நோயாளி கள் இருப்பதாகக் கருதப்படுகின்றது.

இதில் 591பேர் மட்டுமே இனம் காணப்பட்டுள்ளார்கள். இந்தப் பிராந் தியத்தில் வெகுவேகமாகப் பரவி வரும் ஆபத்தில் இருந்து இலங் கையை பாதுகாப்பதற்கே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி யுளளோம் என அமைச்சர் மேலும தெரிவித்துள்ளார். (அ-9)

## சட்டவிரோத ஆயுதங்களைகைப்பற்ற பொலிஸார் கடும் நடவடிக்கை

சட்டவிரோத ஆயுதங்களைக் கைப்பற்றும் பொலிஸாரின் நடவ டிக்கை நல்ல பலன்களைத் தந் துளளதாக மக்கள் பாதுகாப்புச் சட் டம மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரண விராஜ தெரிவிக்கின்றார்.

கடந்த சில வாரங்களில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் மூலம சட்டவிரோத ஆயுத உற்பத்தி நிலையங்கள் சிலவற்றைக் கண் டுபிடிக்க முடிந்ததாக அவர் குறிப் பிட்டுள்ளார். இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் அதிகாரிகள் தங்கள அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத ஆயுதங்களைப் பயன் படுததுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் அதிகாரிக ளுக்கு ஆலோசனை வழங்கப்பட் டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள் ளார். (அ-2)

## கடற்றொழிலாளர் கூ. சங்கங்களின் சமாசங்களுக்கு ஐ.நா.பிரிவு நிதியுதவி

யாழ்பாண மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 4 கடற்றொழிலாளர் கூட்டுறவு சமா சங்களுக்கும மாவட்ட கடற்றொழி லாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்கும் 1கோடி.80 இலட் சம ரூபாவை வழங்க ஐக்கிய நாடு கள் திட்டபபிரிவு முன்வந்துள்ளது.

இந்த உதவி இவற்றின் செயல் பாடுகளுக்கும் கடல் உணவு ஏற்று மதிக்கும் பெரிதும் நன்மையளிக் கும். இந்த நிதியில் 14 இலட்சம் ரூபா காரைநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்திற்கும், 60 இலட்சம் ரூபா வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்திற்கும் 1கோடி 20 இலடசம் ரூபா வடமராட்சி வடக்கு கடற்றொழி லாளர் கூட்டுறவு சங்க சமாசத்திற் கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேசம யம வடமராட்சி கிழக்கு கடற்றொழி லாளர் கூட்டுறவு சங்க சமாசத்திற்கு 78இலட்சம ரூபாவும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்றகு 24 இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. (அ-2)

## வலைப்பந்தாட்டப் போட்டியில் எட்டாவது தடவையாகவும் யாழ்.மாவட்ட அணி வெற்றி

வடக்கு-கிழக்கு மாகாண விளை யாட்டுத் திணைக்களத்தினால் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்குட் பட்ட மாவட்டங்களுக்கிடையே நடாத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்ட அணி முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்டது.

இவ்விளையாட்டுப்போட்டி கடந்த 18,19ஆம் திகதிகளில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இவ்விளையாட்டுப் போட்டியை தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆரம் பித்துவைத்தார்.

எட்டு மாவட்டங்கள் கலந்து கொண்ட இவ்வலைப்பந்தாட்டப் போட் டியில் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட அணி முதலில முல்லைத்தீவு மாவட்ட அணியை எதிர்த்து விளையாடி 58:03என்ற அடிப்படையில் வெற்றி கண்டது. பினனர் திருகோணமலை மாவட்ட அணியை எதிாத்து விளை யாடி 68.04 என்ற அடிப்படையில் வெற்றி கொண்டது.

இறுதிப் போட்டியில், மட்டக் களப்பு மாவட்ட அணியை எதிர்த்து விளையாடி 61:41 என்ற அடிப்படை யில் வெற்றிபெற்றது. யாழ்.மாவட்ட அணியில் தேசிய அணியில் விளை யாடும் ஒரு வீராங்கனையும், மட்டக் களப்பு மாவட்ட அணியில் தேசிய அணியில் விளையாடும் ஏழு அடி வீராஙகனை தாசினியும் இடம்பெற்ற தால போட்டி விறுவிறுப்பான முறை யில் நடைபெற்றதாகவும்,

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட வீராங்கனைகள் அனைவரும் சிறப் பாக விளையாடி யாழ்.மாவட்டத் திற்கு பெருமை தேடித்தந்துள்ளா கள் எனவும் யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பா ளர் திருமதி ஏ.ஏ.எம்.ஜெ.ரூபசிங்கம தெரிவித்தார். வடக்கு-கிழக்குமாகாண விளையாட்டுத் திணைக்களத்தி னால் நடாத்தப்பட்ட வலைப்பந்தாட் டப் போடடிகளில் யாழ். மாவட்டஅணி 1998ஆம்ஆண்டில் இருநது தொடர்ந்து எட்டுத் தடவைகள் வெற்றி பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

## 27 இல் பயிற்சிப் பட்டறை

கிராமிய சுற்றாடல் குழுக்களுக் கான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் பிரதேச சபை யின் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. சுற்றாடல் தொடர் பான வழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனேயே மததிய சுற்றாடல் அதிகார சபையின் யாழ்.உப பிராந் திய அலுவலகத்தினால் இப் பயிற் சிப்பட்டறை நடாத்தப்படவுள்ளது.

இப் பயிற்சிப்பட்டறையில் 'கிராம மட்ட சுற்றாடல் குழுக்களின் பங் களிப்பும் தெழிற்பாடுகளும்' எனும் தலைப்பில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரமும் 'சுற்றா டல் பிரச்சினை இனஙகாணலும் அதற கான தீர்வை திட்டமிட்டு தீர்வு காணலும்' என்ற தலைப்பில் நல்லூா கிராம சேவையாளர் கே.சாந்தமோக னும், திணமக் கழிவு முகாமைத் துவம், மரநடுகை, வெள்ளவாய்க் கால்களின் என்ற தலைப்பில் நல் லூா பிரதேசசபைச்செயலாளர்பி.வைர முததும், 'கைத்தொழில் செயற்பாடும் சூழலியல் பாதிப்பும் அதற்கான தீர்வுகாணலும்' என்ற தலைப்பில்மத் திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ. உபபிராந்திய அலுவலகத்தின சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத் தர் ரி.சுபோகரனும், 'இயற்கையோடு இணைந்த நட்புறவு விவசாயம்'என்ற தலைப்பில் யாழ்ப்பாணம் விவசாய திணைககளத்தின் உதவிப்பணிப் பாளர் ஏ.செல்வராஜாவும் உரை யாற்றவுள்ளனர். (ற-19)

# தவறான பொருளாதாரக் கொள்கையால் பொருட்களின் விலைகள் மீண்டும் உயரும்

## பந்துல குணவர்த்தன எச்சரிக்கை

(கொழும்பு)

பொருட்களின் விலைகள் அடுத்த மாதமளவில் மீண்டும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ள அதேநேரம் எரிபொருட்களின் விலைகளும் மீண்டும உயர்வடையும் நிலையும் காணப்படுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற தவறான பொருளாதார முகாமைத்துவ கொள்கையால் அதிகரித்து வருகின்ற பணவ்க்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமையே விலை அதிகரிப்புகளுககுக் காரணமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 20 மில்லியன் ரூபா கடனிலும், இலங்கை மின்சார சபை 8 பில்லியன் ரூபா நட்டத்திலும் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

எனவே, இவற்றின் சுமையை பொதுமக்களே தாங்க வேண்டியேற்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிழக்கும் போது பணவீக்கம் 3 சதவீதமாக இருந்தது. ஆனால் தற்போது 15 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இதனால் பொருட்கள் சேவைகளில் விலைகள் மேலும் உயர்வடையும் அபாயம் இருக்கிறது. அதேவேளை வரவு செலவுத் திட்டதினூடாக அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டாலும், தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க எந்தத் திட்டமும் மேற்கொள்ளப்படவில்லை. என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-9)

# பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி மட்டு.இல் பெண்கள் யாத்திரை

(மட்டக்களப்பு)

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பில் பெண்களின் பாதயாத்திரை ஒன்று இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலுள்ள வெல்லாவெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் ஏற்பாடுசெய்திருந்த இந்தப் பெண்கள் பாதயாத்திரை 6 கிலோ மீற்றர் வரை நடைபெற்றது.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் சமாதானம் வெற்றி பெற வேண்டுமென்றும் பிரார்த்தித்து விசேட பூஜை வழிபாடும் இடம்பெற்றது.

ஆலயகுரு தலைமையில் இடம்பெற்ற பாதயாத்திரையில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்களும் ஆலய தர்மகர்த்தாக்களும் கலந்துகொண்டனர். (ந-8)

## பிரதான வைத்தியசாலைகள் சார்ந்ததாக

# அடிப்படைச் சுகாதாரப் பிரிவுகளை அமைக்க அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் பிரதான வைத்தியசாலைகள் சார்ந்ததாக அடிப்படை சுகாதாரப் பிரிவுகள் அமைக்கப்பட இருக்கின்றன. இந்த வைத்தியசாலைகளில் நிலவும் நெரிசலைக் குறைப்பது இதன் நோக்கமாகும். அடிப்படை சுகாதார வசதிகள் பற்றி மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லாது இருப்பது நெரிசலுக்குப் பிரதான காரணம் என கண்டறியப்பட்டிருப்பதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

யாசகர்களும், போதைப்பொருளுக்கு அடிமையானோரும் சில நோய்களைக் காரணமாக வைத்து வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற முனைவது மற்றுமொரு காரணம் என அவர் கூறினார்.

வைத்தியசாலைகளில் நெரிசலைக் குறைக்கும் நோக்கிலான திட்டத்தின் கீழ் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கான அடிப்படை சுகாதரப் பிரிவு மருதானையில் அமைக்கப்படும். அதற்கான காணி இனம் காணப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்துடன் இணைந்ததாகப் பிரதான வைத்தியசாலைகளில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யவும் திட்டமிட்டிருப்பதாக அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்குப் பிரதேச செயலகத்தின யூன் மாத பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெறும் என உதவிப் பிரதேச செயலாளர் சு.முரளிதரன் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கை இனப் பிரச்சினை தீர இந்தியாவின் ஒப்புதல் தேவை

இலங்கையின் தனித்தமிழர் தாயகம் பற்றிய ஆட்சேபத்தை இந்தியா நோர்வேயிடம் வலியுறுத்தியிருக்கிறது.

இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் நட்வர்சிங் ஒஸ்லோவில் நோர்வேஜிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டர் சென்னைச் சந்தித்தபோது இலங்கையின் ஐக்கியம் ஆட்புல ஒருமைப்பாடு ஆகியவற்றில் இந்தியா கொண்டுள்ள அக்கறையை மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தர்வுகாணும் விடயத்தல் இந்தியா தீவிரமாக ஈடுபட்டுவந்திருந்தது என நட்வர்சிங் கூறியதாக நோர்வே ஊடகங்கள் அறிவித்திருக்கின்றன.

இந்தியா ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் இலங்கையல் தீர்வு எதுவும் இல்லை என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் எனவும் அவர் கூறியிருப்பதாகத் தெரிகிறது. (அ-2)

# சூட்டுக்காயங்களுடன் இளைஞனின் சடலம்

(மட்டக்களப்பு)

காத்தான்குடி பொலிஸ் பிரிவைச் சேர்ந்த நாவற்குடாப் பகுதியில இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவரின் சடலம் கைகள் கட்டப்பட்டுள்ள நிலையில் காத்தான்குடி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுக்காலை 6.45 மணியளவில் நாவற்குடா கணக்குப்பிள்ளை வீதியில இருந்து இந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எம்.வேரத் தெரிவித்துள்ளார்.

இவரின் தலையில் மூன்று துப்பாக்கிச் சூட்டுக்கள் காணப்படுவதாகவும் சடலம் தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# அதிகாரிகள் கொழும்பு செல்வதால் அலுவல்களும் அபிவிருத்தியும் பாதிப்பு

(கொழும்பு)

மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் அடிக்கடி கொழுமபுக்கு அழைக்கப்படுவதினால் அப்பிரதேசங்களின் அபிவிருத்தி நிர்வாக நடவடிக்கைள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து அண்மையில் நடைபெற்ற பிரதேச செயலாளர் மாநாட்டில் ஆராயபபட்டதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திசாநாயக தெரிவித்துள்ளார்.

பல காரணங்களுக்காக அடிக்கடி கொழும்புக்கு அழைக்கப்படுவதாக மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த அதிகாரிகள் கொழும்புக்கு வருவதால் அவர்களின் கடமைகள் இரண்டு மூன்று தினங்கள தாமதமடைவதாக அரச நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் தமது அலுவல்களைப் பூர்த்தி செய்ய மக்கள் அரச அலுவலகங்களுக்குச் செலலும்போது பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு அவர்களின் வரவை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைளில் அரச நிர்வாக அமைச்சு ஈடுபட்டு வருகின்றது. (அ-9)

# மீன்பிடித்துறையை மீளக்கட்டியமைக்க நோர்வே 300 மில். ரூபா ஒதுக்கீடு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் மீன்பிடித்துறையை மீளக் கட்டியெழுப்புவதற்கு நோர்வே அரசாங்கம் 300 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் சுனாமி அனர்ததினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குப் புதிய மீன்பிடி வள்ளங்களை வழங்கவும, சேதமடைந்த மீன்பிடி வள்ளங்களைத் திருத்தியமைக்கவும் நிதி வழங்கப்படவுள்ளதாக நோர்வேயின பிரதி வெளிவிவ்கார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தெரிவித்துள்ளார்.

கல்முனைக்கு நேற்றுமுன்தினம் விஜயம செய்த போது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மீன்பிடித்துறையை மீளக் கட்டியெழுப்ப நோர்வே அரசாங்கம் 755 மில்லியன் ரூபா வழங்குவதாக முன்னர் உறுதியளித்திருந்தமை குறப்பிடத்தக்கது.

உத்தேச சுனாமி பொதுக்கட்டமைப்பு செயற்படுத்தப்படும்போது மேலும் நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளதாக நோர்வே தூதரகம் தெரிவித்துள்ளது. (அ-9)

# சாத்வீகப் போர் ஆயுதப்போராட்டமாக மாறியமைக்கு சிங்கள - பௌத்த பேரினவாதமே அடிப்படைக் காரணம்

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற 'தமிழ்த்தேசியத்தின் குரல்' நிகழ்வில் அருட்தந்தை வண. ஜி. பேணாட் அடிகளார் ஆற்றிய சிறப்புரை.

தொடர்ச்சி ③



அதேவேளை, அஹிம்சை வழிக்குக் கிடைத்த பதில் வன்முறையும் ஒடுக்குமுறையுமாய் இருந்ததால் இலக்கை அடையும் வழி சாத்வீக போராட்டத்திலிருந்து ஆயுத போராட்டமாக மாறியது: இம்மாற்றங்களுக்கு அடிப்படைக் காரணமாயிருந்தது சிங்கள-பௌத்த பேரினவாதமே.

## ஆயுத போராட்டம்

அஹிம்சை வழியில் நம்பிக்கையிழந்து ஆயுதப் போராட்டமே அடுத்தவழி என்ற கருத்து வளரத்தொடங்கியது. 1978ஆம் ஆண்டில் ''தமிழீழ விடுதலைப்புலிகள்'' என்ற ஆயுதம் தாங்கிய அமைப்பு தமிழ் இளைஞர் மத்தியில் உருவாகியது. சிறிய கெரில்லாப் படையாக ஆரம்பித்த இந்த அமைப்பு, காலப்போக்கில் பலம்வாய்ந்த மரபுவழி இராணுவமாக வளர்ச்சி பெற்றது.

## பாதுகாப்புப் படையினரின் பங்கு

பேரினவாத அரசியற் தலைமைத்துவம், தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தை நசுக்குவதற்கு இராணுவத்தைப் பயன்படுத்தியது. ஆரம்பத்தில் வெறும் சோடினையாயிருந்த இராணுவம், காலப்போக்கில் சர்வதேச அரங்கில் தான் இழந்துபோன நற்பெயரை மீளப்பெறுவதற்கு பெரும் பாடுபடவேண்டியிருந்தது. அவ்வளவு மோசமான அட்டூழியங்கள் இடம்பெற்றன; கற்பழிப்பு, சித்திரவதை, எதேச்சையான கைதுகள், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், கைதுசெய்யப்பட்ட பின் "காணாமற் போதல்" போன்ற பல மனித உரிமை மீறல்களுக்குப பொறுப்பாயிருந்தனர். இச்செயல்களாலும், கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களாலும் 65 ஆயரத்திற்கு மேற்படட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

சேதமடையாத கட்டடங்களேயில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கவசமாகக் கொண்டு, "சர்வதேச மனித உரிமைகள் மசோதாவில்'' பொறிக்கப்பட்டுளள சகல உரிமைகளும் மீறப்பட்டன.

## திம்புப் பேச்சுவார்த்தைகள் - 1985

போரைக் கைவிடுவதற்கென இந்தியாவின் அனுசரணையுடன் இப்பேச்சுவார்தைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. இதில் கலந்துகொண்ட சகல தமிழ்க் குழுக்களும், தமிழ்மக்கள் ஒரு தனித்துவம் கொண்ட தேசிய இனம், அவர்களுடைய தாயகமும் அதனுடைய பௌதீக ஒருமையும, சுயநிர்ணய உரிமை ஆகியவை அங்கீகரிக்கப்படுதல் ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளை முன்வைத்தனர். இலங்கை அரசோ இவற்றை நிராகரித்தது. இதையடுத்துமோர் போர் தீவிரமடைந்து, நீடித்தது.

## போர் நிறுத்த ஒப்பந்தம் - 2002

இராணுவ ரீதியில் பலமான இடத்தில் நின்ற போதும் தமிழீழ விடுதலைப்புலிகள் இவ் ஒப்பந்தத்தை ஏற்படுத்த முன்வந்தனர். ஆனால், தென்பகுதி சுயநல அரசியற் போட்டிக் கலாசாரம் இதை மழுங்கடித்துள்ளது. தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை முன்னேறுவதாக இல்லை. தொடர்ந்து நிலைநிற்கும் இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களும் இதற்கான காரணங்களில் ஒன்றாகும். விவசாய நிலங்கள், மீன்பிடித் தொழில், பாடசாலைகள் போன்ற பல விடயங்களில் இயல்பு நிலை முழுமையாகத் திரும்பவில்லை.

## இன்று

இன்றைய நிலையில், சுனாமிப் பேரலையின் அழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு - சர்வதேச சமூகத்தின் மனத்தையே உருகவைத்த இவ் இயற்கைப் பேரழிவினால் பாதிக்கப்பட்டு வாடிநிற்கும் மக்களுக்கு உதவுவதறகு - ஒரு சிறியளவிலான கட்டமைப்பை அமைப்பதற்கு அதுவும் கூட்டாக அமைப்பதற்கு, இதுவரை இயலாத நிலைமை! 50 ஆண்டுகளுக்கு மேலாக மனிதாபிமானத்தை அவ்வளவுக்கு விரட்டிவிட்டது பேரினவாதம்.

## நிறைவாக

இப்பேரினவாதம் தமிழ்மக்களின் உரிமைப் பிரச்சினைக்கு நியாயமான வழிகளைக் கையாளவிடும் என்று இனிமேல் எள்ளளவேனும் எதிர்பார்க்கமுடியாது. இந்நிலையில், தமது நிலத்தைத் தமது பலத்தில் தாமே பாதுகாத்து, தமது சுயத்தை தாமே நிர்ணயிப்பதென தமிழ் மககள் கொண்டுள்ள உறுதியை இவ் அரங்கில் பிரகடனப்படுத்துகின்றனர். (ற-19,43)

ஒரே நேரத்தில் 3 இடங்களில்

# பக்தாத்தில் கார்க்குண்டுத் தாக்குதல் 23 பேர் பலி; 50 பேர் படுகாயம்



(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் ஒரே நேரத்தில் 3 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதல்களில் 23 பேர் பலியாகியுள்ளதுடன் 56 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஈராக்கில் கடந்த இரு மாதங்களாக அல்-கெய்டா தீவிரவாதிகள் கடும் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இந்தத் தாக்குதலுக்கு அல்-கெய்டா அமைப்பின் ஈராக் தலைவர் அபுமுசாப் அல் சர்காவி மூலகாரணமாக இருந்து வருகிறார்.

கடந்த இரு மாதங்களில் மட்டும் ஈராக்கில் நடந்த தாக்குதலில் ஆயிரத்து 200 பேர் பலியாகியுள்ளனர். 120 அமெரிக்க வீரர்களும் இதில் இறந்துள்ளனர். இருப்பினும் அல்-கெய்டா தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

பக்தாத் நகரில் நேற்று முன்தினம் ஒரே நேரத்தில் 3 இடங்களில் கார் வெடிகுண்டு மூலம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். சாலையோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டு இருந்த கார், உணவு விடுதி அருகே நிறுத்தி இருந்த கார், பொதுமக்கள் நடமாடும் முக்கிய தெருவல் நின்று கொண்டு இருந்த கார் என்பவற்றில் பயங்கர குண்டு வெடித்தது.

இந்த வெடிகுண்டு தாக்குதலில் 23 பேர் பலியாகியுள்ளதுடன் 56 பேர் படுகாயம் அடைர்துள்ளனர்.

பிரெசெல்ஸ் நகரில் ஈராக் வளர்ச்சிக்காக அமெரிக்கா மற்றும் வெளிநாட்டு தலைவர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அல்-கெய்டா அமைப்புத் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே அன்றைய தினம் நள்ளிரவில் ஈராக் மந்திரி சென்ற பாதையில் தீவிரவாதிகள் பதுக்கி வைத்திருந்த குண்டு வெடித்தது. இதில் பலியானவர்கள் விபரம் தெரியவில்லை. இதேபோல் மோசூல் நகரில் அமெரிக்கப்படை சென்ற பாதையில் கார் வெடிகுண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 3 பேர் பலியானார்கள். (ற)

இஸ்ரேலில் பயங்கரம்

# ரயில் - லொறி கோர விபத்து 15 பேர் பலி;180 பேர் படுகாயம்

(கிப்புட்ஸ் ரேவாடிம்)



இஸ்ரேலில் நடந்த ரயில் விபத்தில் 15பேர் பலியாகியுள்ளதுடன் 180பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலில், ஹைபா நகரில் சென்ற பயணிகள் ரயில், தண்டவாளத்தின் குறுக்கே சென்ற லொறி மீது பயங்கரமாக மோதியது.

கட்டுமானப் பணிக்காக லொறி மணலை ஏற்றிச் சென்று கொண்டிருந்தது. மோதல் காரணமாக ரயில் பெட்டிகள் தடம் புரண்டன. பயணிகள் தூக்கிவீசப்பட்டனர். லொறி அப்பளம் போல் நொருங்கியது. அதன் டிரைவர் ஸ்தலத்திலேயே உடல் சிதறிப் பலியானார்.

விபத்தில் ரயில் பயணிகள் 14பேர் பலியாயினர். இவர்களில் பெரும்பாலானோர் ரயிலின் முதல் பெட்டியில் பயணம் செய்தவர்களாவர். லொறி மீது மோதியதால் இந்தப் பெடடி பிளந்துவிட்டது. 180 பயணிகள் காயமடைந்தனர். இவர்களில் 12 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலில் கடந்த இருபது ஆண்டுகளில் இடம்பெற்ற பாரிய ரயில் விபத்து இதுவென்று தெரிவிக்கப்படுகிறது. கடந்த 1985ஆம் ஆண்டு பள்ளி பஸ் மீது ரயில் மோதியதில் 22 சிறுவர்கள் இறந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ஜப்பான் கப்பல்களை தாய்வான் தாக்குமா?

தாய்வான் நாட்டு மீனவர்களை ஜப்பான் கடற்படை வீரர்கள் துன்புறுத்துவதாகவும், அவர்களது படகுகளையும், மீன்களையும் பறிமுதல் செய்வதாகவும் எழுந்துள்ள புகார்களைத் தொடர்ந்து தாய்வான் அரசு இரண்டு போர்க் கப்பல்களை சீனக் கடல் பகுதிக்கு அனுப்பியுள்ளது.

இப்போர்க் கப்பல்களில், நீண்டதூரம் பறநது சென்று கப்பல்களைத் தாக்கும் ஏவுகணைகளும் பொருத்தப்பட்டுள்ளன.

தற்போது ஜப்பான் கடலோரப் பாதுகாபுப் படகுகளையும், கப்பலகளையும் தாய்வான் தாக்குமா? என்ற அச்சம் எழுந்துள்ளது.

டயோயூ பகுதியில் மீன் பிடிப்பது தொடர்பாக மூன்று நாடுகளுக்குமிடையே பல ஆண்டுகளாக சர்ச்சை நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. (ற)




# தொடர் மழை - நிலச்சரிவு சீனாவில் 60 பேர் உயிரிழப்பு

ஒரு இலட்சம் பேர் இடப்பெயர்வு



(பீஜிங்)

சீனாவில் ஏற்பட்ட தொடர்மழை - நிலச்சரிவால் 60 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் தென்பகுதியில் கனமழை பெய்து வருகிறது. அங்குள்ள வாசூவா, சாங்கிங், காங்சி ஆகிய 3 மாகாணங்களில் வீதிகளில் மழை வெள்ளம் புகுந்துவிட்டது.

இதனால் வாசூவா மாகாணத்தில் ஓடும் ஜிஜியாங் ஆற்றில் 25.74 மீற்றா உயரத்திற்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. எச்சரிக்கை அளவை விட இது 8 மீற்றர் உயரம் அதிகமாகும் இதையடுத்து வாசூவா மாகாணத்தில் அபாயமணி ஒலிக்கபபட்டது. பொதுமக்கள் தாழ்வான பகுதியை விட்டு மேட்டுப்பகுதிக்கு ஓட்டம் பிடித்தனா்.

சாங்கிங் நகரில் மட்டும் 30 ஆயிரம வீடுகளில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர். காங்சி மாகாணத்தில மழை வெள்ளத்தால் பல இடங்களில் நிலச் சரிவு ஏற்பட்டது. இதேபோல் 3 மாகாணங்களிலும் ஏற்பட்ட நிலச்சரிவில் மொத்தம் 60 பேர் பலியாகினர்.

சுமார் 1 இலட்சம் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர். அங்கு நிவாரணப பணிகளை உடனடியாக மேற்கொள்ளும்படி சீனப் பிரதமர் வென் ஜியாபோ உத்தரவிட்டுள்ளார். (ற)

# ஹுரியத் தலைவர்களின் பயணம் விதிமுறைகள் எதனையும் மீறவில்லை

மன்மோகன் சிங்குக்கு பாக். பதில்

(இஸ்லாமாபாத்)

ஹுரியத் தலைவர்களை, பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரைத் தாண்டிச் செல்ல அனுமதித்ததன் மூலம், ஸ்ரீநகர் - முஸாபராபாத் பஸ் பயண விதிமுறைகளை பாகிஸ்தான மீறிவிட்டது என்ற பிரதமர் மன்மோகன்சிங்கின் குற்றச்சாட்டை அந்நாடு மறுத்துள்ளது.

ஹுரியத் தலைவர்களின் பயணம் அமைதி முயற்சிகளின் ஓர் அங்கம்தான் எனவும் இது ஒரு நல்ல முன்னேற்றம் எனவும் பாகிஸ்தான் வெளியுறவு செய்தித் தொடர்பாளர் ஜலீல் அப்பாஸ் ஜிலானி தெரிவித்துள்ளார்.

பாஸ்போர்ட் மற்றும் விசா இல்லாமல் பாகிஸ்தானுக்கு ஹுரியத் தலைவர்கள் வந்ததில், இரு நாடுகளுக்கிடையேயான பஸ் பயண விதிமுறைகள் ஏதும் மீறப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விபரம் தொடர்பாக இந்தியாவிலிருந்து அதிகாரபூர்வமாக எவ்வித தகவலும் வரவில்லை எனத் தெரிவித்துள்ளார் ஜிலானி.

இரு நாடுகளுக்கிடையேயான அமைதி முயற்சிகளின் ஓர் அங்கமாகவே ஹுரியத் தலைவர்களின் பயணத்தை நாங்கள் கருதுகிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# அமெ. இராணுவ உழவு விமானம் வீழ்ந்து நொருங்கியது!

(வோஷிங்டன்)

அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான யு.2 என்ற உளவு விமானம் தெற்மேற்கு ஆசியாவில் வீழ்ந்து நொருங்கியுள்ளதுடன் அதன் விமானி உயிரிழந்துள்ளதாக பகதாத்திலிருந்து வெளியிடப்பட்ட இராணுவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆப்கானிஸ்தானில 'சுதந்திரத்துக்கு முடிவு' என்ற தாக்குதல் நடவடிக்கையை முடித்துக் கொண்டு தளத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கையிலேயே இந்த விபத்து ஏற்பட்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்தச் சம்பவம் நிகழ்ந்த இடத்தைக் குறிப்பிட்டுக் கூற முடியாதுள்ளதாக அமெரிக்க விமானப் படை மத்திய கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளார்.



விமானப்படை அதிகாரிகள் குழுவொன்று இது தொடர்பான விசாரணைகளை நடத்தி வருவதாகவும் விரைவில் இவ்விபத்துக்கான காரண கண்டறியப்படுமென்றும் அவர் மேலும தெரிவித்துள்ளார்.

யு.2 விமானம் 1955ஆம் ஆண்டு முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. 1960ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் சோவியத் யூனியனில் இந்த இனத்தைச் சேர்ந்த விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டதைத தவிர வேறு எவ்வித விபத்துக்களும் நிகழவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற,து)



சீன ரோபோ விஞ்ஞானிகள் புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளனர்.

உடல் ரீதியான நோய்களுக்கு கண்டு பிடிக்கும் மருந்துகள் முதலில் எலிகளுக்கு கொடுக்கப்பட்டு அது முழு வெற்றி அடைந்த பின்னர் மனிதர்களுக்கு கொடுக்கப்படுவது வழக்கம்.

இதேபோன்ற ஆராய்ச்சியில் சீன ரோபோ விஞ்ஞானிகள் புதிய சாதனை ஒன்றைப் படைத்து உள்ளனர்.

சீனாவின் ஷான்டாங் டெக்னாலஜி பல்கலைக்கழக விஞ்ஞானிகள் எலியின் தலையில் மைக்ரோ எலெக் ரோட்ஸயை பொருத்த அந்த எலியின் நடவடிக்கையை தங்கள் கட்டுபபாட்டின் கீழ் கொண்டு வந்து உள்ளனர்.

அதாவது கம்பியூட்டரில் இருந்து "வலது புறமாக திரும்பு" என்று உத்தரவு பிறப்பித்தால், எலி வலதுபுறமாகத் திரும்பி நிற்கிறது. கம்பியூட்டரில் என்ன கட்டளை பிறப்பித்தாலும் எலி அதன்படியே செயல்படுகிறது. ஆராய்ச்சிக்கு பயன்படுத்தப்பட்ட அந்த அதிசய வெள்ளை எலியைப் படத்தில் காணலாம்.

# கிறிஸ்தவ தேவாலயத்தில் உயிர்ப்பலி

(இலண்டன்)

இங்கிலாந்து நாட்டில் இலண்டன் நகரில் உளள கிறிஸ்தவ தேவாலயங்களில் ஆபிரிக்காவைச் சேர்ந்த சிறுவர்கள் உயிர்ப்பலி கொடுக்கப்படுகிறார்கள்.

உயிர்ப்பலி கொடுப்பதற்காக ஆபிரிக்க நாடுகளில் இருந்து சிறுவர்கள் இங்கிலாந்துககு கடத்திச் செல்லப்படுகின்றனர். ஆபிரிக்காவில் இந்த சிறுவர்கள் தலா 800 ரூபாய்க்கு வாங்கப்பட்டு, கடத்தப்படுகிறார்கள்.

கெட்ட ஆவி அல்லது சாத்தான் சிறுவர்கள் உடலில் புகுந்து இருப்பதாக நம்பும் கறுப்பு இன மக்கள், அதை விரட்டுவதற்காக தங்கள் குழந்தைகளை பலி கொடுத்து இருப்பதும் தெரியவந்துள்ளது.

இங்கிலாந்தில் கிட்டத்தட்ட 300 தேவாலயங்களில் உயிர்ப்பலி கொடுத்து இருப்பது தெரியவந்துள்ளது.

இலண்டன் நகரப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் 4 முதல் 7 வயதுக்கு உட்பட்ட 300 கறுப்பின சிறுவர்களில் 2 பேரை மட்டும் கடந்த 3 மாதங்களாகக் காணவில்லை என்பது தெரியவந்துள்ளது.

இப்படி காணாமல் போகும் கறுப்பு இனச் சிறுவர்களின் உண்மையான எண்ணிக்கை ஆண்டுககு பல ஆயிரம் ஆகும். 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தேம்ஸ் நதியில் தலையில்லா முண்டம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அந்த உடலுக்கு உரிய சிறுவனின் பெயா ஆடம் என்று கூறப்படுகிறது. நைஜீரியாவைச் சேர்ந்த இவன், தேவாலயத்தில் உயிர்ப்பலி கொடுக்கப்பட்டான் என்பது பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது. இதைத் தொடர்ந்து தான் தேவாலயத்தில் உயிர்ப்பலி கொடுப்பது வெளிஉலகத்துக்கு தெரியவந்தது. (ற)

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு - குறள்

# வலம்புரி

## அரங்கேறாத நாடகங்களுக்கு நடத்தப்படும் ஒத்திகைகள்

அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு மூன்று வருடங்கள் நிறைவாகிவிட்டன.

இருந்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் உருப்பெற்றதாக இல்லை. இச்செய்தியை பல தடைவைகள் கேட்டு காதே புளிச்சுப்போயிருக்கும் நிலையில் மீண்டும் ஒரு தடைவை ஞாபகப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் கைச்சாத்தான யுத்தநிறுத்த உடன்படிக்கையில், உடன்படிக்கை அமுலுக்கு வந்து மூன்று மாதங்களுக்குள் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற வாசகம் உள்ளது.

எனினும் உடன்படிக்கையை செய்து கொண்ட ஐக்கிய தேசியக்கட்சி கூட அந்த வாசகத்திற்கு உயிர்கொடுக்க வில்லை. இவை கடந்துபோன விடயமாயினும் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் முன்வைக்கப்படுகின்ற எல்லாத்திட்டங்களுமே காலம் கடந்து செயலிழந்து போன வரலாறாக இருக்கின்றது.

இவ்விதம் தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பில், முன்வைக்கப்படுகின்ற திட்டங்கள் தோல்வியில் போவதற்கோ அல்லது வழக்கொழிந்து போவதற்கோ காரணம் யாது என ஆராய்ந்தால் அது சிங்கள அரசுகளின் விசுவாசமற்ற தன்மை என்பதாகவே ·இருக்கும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து இதற்கான தீர்வு இதுதான். இதன்மூலமே இலங்கையில் இன ஒற்றுமைய்யை ஏற்படுத்த முடியும் என்ற ஓர் பொது முடிவிற்கு வரும் தன்மை சிங்கள அரசுகளிடம் இல்லை.

தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதென்பது இலங்கையின் ஆட்சி அதிகாரங்களை இழக்கும் விடயமாகவே சிங்கள அரசியல்வாதிகளும் சிங்களமக்களும் கருதிவந்தனர்.

அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுப்பது இந்த நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் அடிப்படையானது என்ற உண்மை சிங்கள தலைமைகள் உணர்ந்து கொள்வதில் இருக்கக்கூடிய தடைகளே இனப்பிரச்சினைகளின் உச்சத்திற்கு காரணமாகும்.

இங்குதான் சிங்களப் புத்திஜீவிகள் தவறிழைத்துள்ளனர். தமிழ்மக்களின் பிரச்சினைகள் என்ன? அவர்களின் பிரச்சினைக்கு காத்திரமாக தீர்வை எட்டத்தவறினால் அதனால் இந்த நாட்டிற்கு ஏற்படக்கூடிய தீங்குகள் எவை? என்பதை எடுத்துக்கூற அவர்கள் தவறிவிட்டனர்.

அவர்கள் விட்ட தவறுகள் காரணமாக தென்னிலங்கை அரசியலில் புத்திஜீவிகளின் பங்களிப்பு வலுக்குறைந்து போக இனவாதிகளும் பௌத்த பிக்குகளும் அதிகாரம் செலுத்தலாகினர். அதே நேரம் இலங்கையின் அமைவிடமும் அதன் அளவுப்பரிமாணமும் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையை சர்வதேசம் கண்டு கொள்வதற்கு தடையாக இருந்தது.

ஆரம்ப கட்டத்திலேயே ஈழத்தமிழரின் உரிமை பற்றி உலகநாடுகள் அக்கறை கொண்டிருக்குமாயின் நிலைமை இந்தளவு தூரம் மோசமாகி இருக்காது என்னது உண்மை.

தற்போது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென உலகநாடுகள் அழுத்தம் கொடுக்கின்ற போதிலும் அதற்கு செவிசாய்க்கும் அளவில் இலங்கை ஆட்சியாளர்கள் இல்லை.

மாறாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது போன்ற நாடகத்தை காட்டி உலகை ஏமாற்ற வைப்பதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள். அதன் ஒரு நாடகமாகவே சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணியை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பை கூறலாம்.

சுருங்கக்கூறின் அரங்கேற்றப்படாத பொதுக் கட்டமைப்பு என்ற நாடகம் ஒத்திகை பார்க்கப் படுகின்றது என்பதே உண்மை.

# பொதுக்கட்டமைப்பு தொடர்பில் புலிகளும் அரசாங்கமும் ஆர்வம்

## முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்கிறார் விடார்

(கிளிநொச்சி)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளும அரசாங்கத்தினரும் ஆர்வமாகவுள்ளனர். இவ் ஆர்வத்தினைக் கடந்து முன்னேறி பொதுக்கட்டமைப்பில் எப்போது கையெழுத்திடுவார்கள் என்ற அறிவிப்பினை அவர்கள் விரைவில்



வெளியிடுவார்கள் என நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச சந்தித்த பின்னர் இச் சந்திப்புக் குறித்து ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவதில் முன்னேறறம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் எப்போது பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவார்கள் என்பதில் கால எல்லை கிடையாது. கால எல்லை குறித்த அனுமானமும் கிடையாது.

ஆனால் நிச்சயம் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை எமமால் உணரமுடிகின்றது. இதனை நாங்கள் இரு தரப்பினரதும் ஒத்துழைப்புடன் செய்து முடிப்போம் என்ற நம்பிக்கை எமக்குப் பூரணமாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ர-4)

## வெட்டியது மீண்டும் ஒட்டுமா?

(கொழும்பு)

அரசாங்கத்துடன் ஒரு வருடத்துக்கு இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக்கொள்ளும் முகமாக, 50 விடயங்கள் அடங்கிய யோசனைகளை அரசாங்கத்துக்கு முன்வைக்கவுள்ளதாக ஜே.வி.பியின் மேல்மாகாண சபை உறுப்பினர் குழுவின் தலைவர் வர்ணகீர்த்தி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேல்மாகாண சபையின் முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் நந்தன மெண்டிஸுக்கு தாம் ஆதரவினை வழங்குவதாகவும் அவா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீரவுடன் நடாத்திய பேச்சுவார்ததையின பின்னரேயே நிபந்தனையுடன் கூடிய தமது ஒத்துழைப்பினை வழங்க ஜே.வி.பியினா முன்வநதுள்ளதாகத் தெரியவருகிறது. (ர-4)

## பொதுக்கட்டமைப்பில்

# முஸ்லிம்களின் அபிலாஷைகள் புறக்கணிப்பு; அரசிலிருந்து விலகப் போவதாக நுஆ மிரட்டல்

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரணப் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என்ற கோஷத்துடன் அரசில் அங்கம் வகிக்கும் பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முண்ணணி (நுஆ) ஜனாதிபதிக்கு. எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளது.

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு உரிய இடம் வழங்கவில்லை என ஜனாதிபதியுடன் முறுகிக்கொண்டு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அரசைவிட்டு விலகுவதாக தேசிய ஐக்கய முன்னணி அறிவிததது.இதன்படி அதன் தலைவி பேரியல் அஷ்ரப்பை சமாதானம் செய்த ஜனாதிபதி பேரியலின் கோரிக்கை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

கொழும்புக்கு வந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்துப் பேசியபோது “பொதுக்கட்டமைப்பை இனியும் இழுத்தடிக்கத் தயாரில்லை. அது இறுதியாககப்பட்டுவிட்டது. அதில் விரைவில் கைச்சாததிடவே விடுதலைப் புலிகள் விரும்புகிறார்கள்'' என்று தெரிவித்தார்.

இதனையடுத்து உத்தேச வரைபில் முஸ்லிம்களின் அபிலாஷைகள் கரிசனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும் இந்நிலையில் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் எச்சரித்திருந்தது. இது இவ்வாறிருக்க செவ்வாய்க்கிழமை மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஹெலகிசன் சந்திததா. இச் சந்திப்பில் முஸ்லிம் விவகாரம் குறித்து எதுவும் சாதகமான தகவல் கிடைக்காததையடுத்து அன்று இரவே அரசை விட்டு வெளியேற தேசிய ஐக்கிய முண்ணணி தயாரானது.

இதுகுறித்து அறிந்த ஜனாதிபதி உடனடியாக தேசிய ஐக்கிய முண்ணணித் தலைவி பேரியல் அஷ்ரப்பை அழைத்துக் கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது. (ர-4)

## அடிப்படை மனித உரிமைகளை பாதுகாக்கச் சட்டத் திருத்தங்கள்

(கொழும்பு)

கட்டாய தண்டனை திருத்தச் சட்டமூலம், குற்றவியல் நடைமுறைக் கோவை திருத்தச் சட்டமூலம், சிறைச்சாலை திருத்தச் சட்டமூலம் ஆகியன பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேறின. நீதியமைச்சர் டபிள்யூ.டி.ஜோன் செனவிரத்ன சபையில் இந்தச் சட்டமூலங்களை சமர்ப்பித்துப் பேசுகையில் கட்டாய தண்டனை விதி நீக்கவேண்டிய காலம் வந்துவிட்டது என்று கூறியுள்ளார்.

அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்க இந்தத் திட்டங்கள் உதவும் என்று அமைச்சர் கூறினார். (அ-2)

## சுனாமியால் வீடிழந்த மக்களுக்கு வீடுகள் ஹைரெக் லங்கா ஹோம்ஸ் நிறுவனம் அமைக்கும்

(கொழும்பு)

சுனாமியினால் வீடுகளை இழந்த மக்களுக்காக குறைந்த செலவில் உயர்ந்த தரத்திலான குடியிருப்புகளை நிர்மாணிக்கக் கூடிய வீடமைப்புத்திட்டத்தை ஹைரெக் லங்கா ஹோம்ஸ என்ற நிறுவனம் அறிமுகப்படுத்தியிருக்கிறது.

இந்தத் திட்டத்தை ஒரு அவுஸ்திரேலிய நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ள லங்கா ஹோம்ஸ் நிறுவனம் முன் வந்துள்ளது.

தற்போதைய தருணத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளை மீள் நிர்மாணம் செய்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குவது அத்தியாவசியமானதாகுமென்று அந்த நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன ஹெட்டியாராய்ச்சி கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் நிதிப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருப்பதனால் குறைந்த செலவிலான இந்த வீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

14 நாட்களுக்குள் கட்டி முடிக்கக் கூடிய இந்த வீட்டின் பெறுமதி 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாகும். ஒரு வீட்டின் பரப்பளவு 504சதுர அடிகளாகும். இவ்வாறான வீடுகள் ஏற்கனவே ரத்மலானைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதாக கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் அந்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண வேலைத் திட்டங்களில் இது ஒரு சிறந்த உதாரணமாகும் என்று இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் கலாநிதி ஹெரிய பிறின்ஜ் கூறியுள்ளார். (அ-2)

## ஜூலை முதலாம் திகதி முதல் அ. அட்டைகள் வழங்கப்படும்

(கொழும்பு)

வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவாகியிருந்த போதும் இதுவரை அடையாள அட்டை எடுக்காதோருக்கு அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எதிர் வரும ஜூலை முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் இடாப்பில் பெயர் இருந்தபோதும் அடையாள அட்டைகளை எடுக்காத நிலையில் சுமார் 25 இலட்சம பேர் உள்ளனர். இவ்வாறானவர்களுக்கே அடையாள அட்டைகளைத துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு வர்ணப் புகைப்படத்தைக் கொண்ட அடையாள அட்டைகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(ர-8)



## திைசரி தியானம் விவேகச் சிந்தனைகள்

யார் நம்மை அறியாமையுடையவர்களாக மாற்றினார்கள்? நாமே நம் கைகளாலேயே கண்களை மூடிக்கொண்டு ஒரே இருட்டாக இருக்கிறது என்று கூறி அழுகிறோம். கைகளை எடுங்கள் வெளிச்சம் தெளிவாகிறது. வெளிச்சம் அங்கு எப்போதும் இருக்கிறது. மனித ஆன்மாவின் சுய ஒளி எப்போதும் உள்ளது.

சுவாமி விவேகானந்தர்

## பொதுக்..

கட்டமைப்பு பாராளுமன்றில் சமர்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இது இவ்வாறிருக்க மக்களை குழப்பும் வகையில் செய்திகள் வெளியிடும் தனியார் ஊடகங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென அரச வானொலி நேற்று நள்ளிரவு தெரிவித்தது.(ச)

## எதிர்வரும்...

பிரதேச செயலகம் சென்றடைந்து மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன.

கடந்த 90 ஆம் ஆண்டு தீவகத்தை இராணுவம் ஆக்கிரமித்து கொண்டது. அன்றுதொட்டு இன்று வரை தீவகம் பல்வேறு அழிவுகளைச் சந்தித்து வருகிறது.

படையினர் நிலைகொண்டிருக்கும் வரை எமக்கு வாழ்வு கிடையாது எனப் பல பொதுஅமைப்புக்கள் குரல்கொடுத்துவருகின்றன.

இதனால் படையினர் வெளியேறும்வரை தொடர் போராட்டங்கள் நடத்தவுள்ளனர்.

யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## முஸ்லிம்களுக்கு...

பான்மை முஸ்லிம்அமைச்சர்கள் இராஜினாமாச்செய்யவேண்டும்.

எல்லா நிலைகளிலும் முஸ்லிமகளுக்கு சமத்துவதரப்பு அளிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறுவாசக அட்டைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் ஏந்தியிருந்தனர். (ச-4,9)

## நீரில்...

உயர்தரப் பரீட்சையில் தோற்றும் சிதம்பராக் கல்லூரி மாணவனான கணேசரத்தினம் பிரேம்நாத் (வயது 19) என்ற மாணவனே மரணமான வராவார். இளைஞர்கள் சிலர் இணைந்து கட்டுமரத்தில் கடலுக்குள்சென்று கரைக்கு நீந்திவரும் போதே இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரின் பிரேதப் பரிசோதனையை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாள் மேற்கொண்டார்.

மரண விசாரணையை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிவான் கே.அரியநாயகம் மேற்கொண்டார். மரண விசாரணையின் பின்னர் சடலம் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச)

## 25 அகதிகள் தாயகம் திரும்பினர்

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய வேளையில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் நேற்று ஆஜர்செய்யப்பட்ட 25 அகதிகளை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.அப்துல்லா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அகதிகளை ஏற்றிவந்த படகோட்டிகள் இருவரையும் எதிர்வரும் ஜூலை 7 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மன்னார் கடல்பரப்பில் நேற்று முன்தினம் அதிகாலை தாயகம் திரும்பிக்கொண்டிருந்தவேளை கடற்படையினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ச-08)

# பொதுக்கட்டமைப்பினை எதிர்த்து அரச சேவைகள் வேலைநிறுத்தம்

## தொழில்சங்க சம்மேளன கூட்டமைப்பு அழைப்பு

(கொழும்பு)

உத்தேசப் பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று நாடுமுழுவதும் அரசசேவைகள் வேலைநிறுத்தத்தில் இறங்கும் என்று அகில இலங்கை தொழில்சங்க சம்மேளனக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

அனைத்து அரச நிறுவனங்களிலும் இன்று கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு காரியாலயங்களுக்கு முன்னால், பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது என்றும் நேற்று நடந்த கூட்டமைப்பின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று நடந்த அகில இலங்கைத் தொழில்சங்க சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் சுமார் 80 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ச-8)

# பொதுக்கட்டமைப்பு இன்று...

பொதுக்கட்டமைப்பு ஆவணத்தின் பிரதி ஒன்று மகாநாயக்க தேரரிடம் கையளிக்கப்பட்டது. இதனையடுத்து மகாநாயக்கர் தனது சம்மதத்தைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது அமைச்சர் சரத் அமுனுகம, மத்திய மாகாண ஆளுநர் மொண்டி கோபல்லா ஆகியோரும் கலந்துகொண்டார்.

இது இவ்வாறிருக்க பொதுக் கட்டமைப்பு குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படக்கூடும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவதற்காக இன்று சுபநேரமும் பார்க்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான வரபை விடுதலைப் புலிகளிடம் அரசு கையளித்துவிட்டதாகவும் தெரிவிக்கும் அச் செய்திகள், கடந்த சில தினங்களாக முஸ்லிம், தமிழ்க்கட்சி உறுப்பினர்களுடன் ஜனாதிபதி மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளில் எழுப்பட்ட சில விடயங்களும் இந்த உடன்படிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் கூறுகின்றனர்.

ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், நோர்வே அதிகாரிகள் ஊடாக பொதுக் கட்டமைப்பு நகல் கிளிநொச்சிக்கு அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-4,8)

## நோர்வே...

அவர்களை வரவேற்ற விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் சமாதான செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். (ச-4)

# ஸ்ரீ.சு.கட்சியின்...

வேளையில் இருக்கும் சந்திரிகா குமாரதுங்க அவரது அரசியல் கடைசிக்காலத்தை அண்மித்துள்ளார். ஓய்வுபெறும் வேளையில் அவர் நாட்டிற்கு பெரும் துரோகத்தை இழைத்தவர்களது பட்டியலில் அவரது பெயர் பதிவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாக சோமவன்ஸ கவலை வெளியிட்டார்.

ஜனாதிபதியின் இந்நிலைக்கு ஐக்கிய தேசியக்கட்சியே கார்ணமெனக் கூறிய அவர், புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரமே ஜனாதிபதிஇச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதாக் அவர் கூறினார்.

ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு 2 லட்சத்து 30 ஆயிரம் வருடங்கள் வழங்கினாலும் அவர்கள் ஒருபோதும் ஜனநாயக ரீதியிலான உரிமைகளை பெற்றுக் கொடுக்க மாட்டார்கள் எனவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை சுனாமிப் பொதுக் கட்டமைப்பில் அரசு இன்று கையெழுத்திடவுள்ளது. அதனைத் தடுப்பதற்கு 72 சதவீத மக்கள் ஆணையைக்கொண்டு நாடுதழுவிய ரீதியாக மக்கள் போராட்டங்களை நடாத்தத் துணிந்துவிட்டதாக அவர் கூறினார்.

இதன்முதற்கட்டமாக சகல மாவட்டங்களிலும் இன்று தமது எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெறுமெனவும் எச்சரித்தார்.

பொதுக் கட்டமைப்பில் அரசும் விடுதலைப் புலிகளும் கையெழுத்திடுவார்களானால் நாட்டில் இரண்டு திறைசேரிகள் உருவாக்கப்படும் எனக்கூறிய அவர், வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் கண்காணிப்பு நாட்டின் இறைமைக்கு ஏற்பட்ட பெரும் சவால் எனக் கூறினார். அவர்கள் இலங்கைக்கு வர தமது கட்சி அனுமதிக்காது எனவும் கூறினார்.

புலனாய்வுத்துறை அதிகாரி முத்தலிப் மறைவு எவராலும் ஈடு செய்யமுடியாதெனக் கூறிய அவர், அவரது மறைவால் நாட்டின் பாதுகாப்புச் சேவைக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

இந்நிலை தொடர்ந்தால் அரசாங்கத்தின் தலைவி என்ற வகையில் ஜனாதிபதிக்கு எதிராக பாரிய எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டி வருமெனவும், இதன்போது ஏற்படும் உயிர்த்தியாகங்களையும் ஏற்றுக்கொள்ளத்தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.


மனோகரா யாழ்
அதிரடி வெளியீடு
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லிஆகியோரின் சிறப்பு நடிப்பில்

அந்நியன்
இயக்கம்: ஷங்கர்
இசை: ஹாரிஸ் ஜெயராஜ்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், (இருவேடம்), நயன்தாரா, லட்சுமி, வடிவேல் நடித்த

ஐயா
கா.நேரம்:11.00,2.45,6.00 பு.நே

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இன்று முதல்
Colin Tazil, Anjelina Jolie and Antony Hopkins நடித்த
ALEXANDER
அலெக்சாண்டர்
ஆங்கிலம்
கா.நேரம்: 10.30,2.30,6.30,9.30 (பு.நே)



நயினாதீவு – செம்மணத்தம்புலம்

**அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**

அதிசுந்தர திரி தள இராஜகோபுர நூதன பிரதிஷ்டா பஞ்சகுண்ட பக்ஷ

**மஹா கும்பாபிஷேக பெருவிழா விஞ்ஞாபனம்**

பார்த்திப வருஷம் ஆனி 10ஆம் நாள் 24.06.2005 வெள்ளிக்கிழமை



*விநாயகப் பெருமாள் அடியார்களே,*

விராட் புருடனது இடைநாடித் தாளமென உபநிடதங்களிலே ஓதப்பெற்றும் அனுக்கிரக பூமி சிவபூமி என புராதன இதிகாசங்களிலே போற்றப்படுவதுமாகிய இலங்கை நாட்டின் வடபாரிசத்தில் சீர்பெற்று சைவ கலாசாரம் அமுத தமிழ் மரபும் நின்று நிலவும் யாழ்ப்பாணம் நன்நகரை தலைநகரமாகக்கொண்டு நீர்வளம், நிலவளம் சிறந்து சைவமும், தமிழும் கலந்து மிளிரும் கல்விச் செல்வம் நிறைந்த பதியான நயினையம்பதியில் தென்பால் செம்மணத்தம்புலம் என்னும் திவ்விய ஷேத்திரத்தில் அடியார்களுக்கு இன்னருள் புரியவேண்டுமெனும் பெருங்கருணையோடு அரிய மூஷிக வாகனத்தில் எழுந்தருளியுள்ள முழுமுதல் நாயகனாக விளங்கும் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு புதிதாக மூன்று தளத்தில் பஞ்சகலச இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

நிகழும் மங்களகரமான பார்த்திப் வருஷம் ஆனி மாதம் 10 ஆம் நாள் (24.06.2005) வெள்ளிக்கிழமை உத்தராட நட்சத்திரமும், திருதியை திதியும் சித்தயோகமும் கூடிய காலை 7.00 மணிமுதல் 8.05 மணிவரையுள்ள மிதுன இலக்கின சுபமூகூர்த்தத்தில் இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் நவோத்திர சங்காபிஷேகத்திலும், மகேஸ்வர பூசையிலும் கலந்துகொண்டு அதற்குப் பின் நடைபெறும் கிரியைகளையும் கண்டு பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீராக.

விளம்பர அனுசரணை
ஸ்ரீ அம்பிகை பல்பொருள் வாணிபம்
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவிலடி, நயினாதீவு

ஆலய அறங்காவலர் சபையினரும்,
இராஜகோபுர கும்பாபிஷேக-
உபயகாரர்களும்



எம்மிடம் சகல விதமான ரீவிக்களும், CD,VCD,DVD PLAYERகளும், சகலவிதமான றேடியோக்களும், மற்றும் மின்சார உபகரணங்களும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்

**நியூ சிற்றி ரேடர்ஸ்**

மேல்மாடி. இல135/1 கஸ்தூரியார் வீதி
குளத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம்
(C- சு) T.P: 021 222 3226



**பதவி வெற்றிடம்**

**உள்ளகச் செய்தியாளர்கள்**
ஆண்கள் (இரவுக் கடமை)
பெண்கள் (பகல் கடமை)

**ஒப்புநோக்குநர்கள்**
ஆண்கள் (இரவுக் கடமை)
பெண்கள் (பகல் கடமை)
(க.பொ.த. உயர்தரத்தில் சித்தி)

**புத்தகம் கட்டுநர்கள்**
பெண்கள் (புத்தகம் கட்டுவதில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)

வலம்புரி நிறுவனத்திற்கு 6 கிலோ மீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் 24.06.2005 ( இன்று) காலை 10 மணிக்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் நேரில் வரவும்.

இல:03, 2 ஆம் ஒழுங்கை
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

ஆளணி முகாமையாளர்
வலம்புரி


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.